[illegible]

[illegible]

C

Q25:38.2114
N[illegible]
125516

256

உ

கணபதிதுணை.

தில்லைச்

சிவகாமியம்மையார்

பிள்ளைத்தமிழ்

சிவகாமசுந்தரர்

சிலேடை வெண்பா.

13 OCT 1924

இவை

ஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணாக்கருள் ஒருவர்

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

ஷை யூர்

ராம. உ. விசுவநாதச்செட்டியாரவர்களால்

சிதம்பரம்

ஸ்ரீ ஞானசம்பந்த விலாஸ ப்ரெஸில்

அச்சிடப்பெற்றது.

ருதிரோத்காரி௵ ஆவணி௴.

25:38.2114
N24
125516

13 OCT 1924

உ

கணபதி துணை.

முகவுரை.

அநாதி முத்த சர்வஞ்ஞாதி சுத்தசாட்குண்ணிய பரம்பதியாகிய சிவபிரானுக்கே உரியது; ஈசுரன் என்னுங்காரண நாமம். இது மற்றவர்களை அவரவர் பேர்முதலிய (உபபதங்கள்) அடைமொழிகளுடன் பின்னின்றேயன்றித் தனித்துநின்று விளக்குவதன்று. சிவபிரானொருவனையே அடைமொழி வேண்டாது (நிருபபதமாய்) தனிமொழியாய் நின்று விளக்குவதாம். இதனைப் புறப்புறச்சமணர் "பகவனேயீசன் மாயோன் பங்கயன்" என்று கூறிய நிகண்டு முதலிய நூல்வழக்கினாலும், ஈசுரன் கோயிலென்று கூறும் உலகவழக்கினாலும் காணலாம். ஆகவே ஈசுரநாமம் சிவபிரானொருவனுக்கேயுரிய (யோகரூடி) காரணஇடுகுறிப்பெயரென்பது தெளிவாயது.

இது போலவே, வேத முதலிய விசிஷ்டநூல்களால் விதந்தெடுத்தோதப்பெற்ற சிதம்பரதலத்துக்கே உரியது கோயிலென்னுங்காரணப் பெயர். இது மற்றைத்தலங்களில் அவ்வத்தல முதலிய அடைமொழிகளை அடுத்து நின்றேயன்றித்தனித்து நின்று விளக்குவதன்று. சிதம்பரஸ்தலமொன்றை மாத்திரமே தனிமொழியாய் நின்று விளக்குவதாம். இதனை ஆரியவேத முதல்வனே, அவ்வேதத்தை வடித்துத்தெளித்தெடுத்த சாரமாய்த் தன்னில் அபேதர்களாகிய சிவாநுபூதிப் பெருஞ்செல்வர்களின் திருவாக்கிடமாக வெளியிட்டருளிய சீரிய திராவிட வேதமுதலிய பதிநூல்களாற் காணலாம். ஆகவே கோயிலென்னும் பெயர் சிதம்பரஸ்தலமொன்றிற்கேயுரிய காரண இடுகுறிப் பெயரென்பது தெளிவாகியது.

இத்தகைய உத்தமோத்தம வைதிக சைவ தைவிகச்சிறப்பு வாய்ந்த சிதம்பரத்திலே அநவரத தாண்டவஞ்செய்தருளுகின்ற ஸ்ரீமந் நடராஜராஜாது திருவுருவம் ஏனைத்தலங்களிலுள்ள மாகேசுர வடிவம் இருபத்தைதுளொன்றாகிய உருவம் போல்வதன்று. அம்மாகேசுரத்தின் மேற்சாதாக்கியமுங்கடந்து நிற்குஞ் சிவசொரூபமேயாம். இவ்வுண்மை, அந்நடேசப் பெருமானே, நாதமுதலாகத் தோற்றுவிக்கும் சிருஷ்டிக்கும், அபயக்

கொடுத்தருளுதற்கு உலகை அழைத்தற்கும் அங்கமாய்க் கொண்ட டமருகத்தின் தொனியினால் நடராஜராஜ என்று அடுக்கி விளக்கினமையாலுங் காணலாம். ஆகவே, ஏனை நடராஜமூர்த்திகளுக்கெல்லா மேலாகிய ராஜமூர்த்தி இம்மூர்த்தியே என்பது தெளிவாயது.

இப்பெருஞ் சிறப்பு வாய்ந்து உலகெலாமுணர்ந்தோதற்கரிய நிலையினின்றருளுகின்ற ஸ்ரீமந் நடராஜராஜ வள்ளலை, உலகெலாமுணர்ந்தோதற்குரிய நிலையில் நிற்பித்தற்கியைந்த திருவருட்டிருமேனி தந்து ஐந்தொழிற் கூத்து அசைவறப் புரிவித்தருளி, "நோயுண்மருந்து தாயுண்டாங்கு" என்று பெரியோர் விளக்கியவாறு, அத்திருநடனத்தையே அநவரதம் பாங்கினின்று கண்டுகொண்டு முக்கரணத்தாலும் உலகெலாமுணர்ந்தோதி வணங்கி நின்றுய்தற்குரிய வழிகாட்டியருளுகின்ற அளவு கடந்த பெருங்கருணைத் தடங்கடலாகிய லோகமாதா ஸ்ரீசிவகாமியம்மையார். இவரது பெருங்கருணைப் பெரும்புகழ் வேதாதிகலைகளாலும் பிரம விஷ்ணுவாதி தேவர் முனிவர் யாவராலும் அளவிடற்பாற்றன்று.

அணுத்துணையும் அறிவாற்றலில்லாத நாயிற் கடையாகிய நாயேன் அப்பெரும் புகழைப் பாடுமாறு நினைத்தற்கும் அருகனல்லேன். அங்ஙனமாகவும், அடியேன் பஞ்சாக்ஷரப்படியின் கீழ் வலப்பால் நின்று தரிசிக்கும்போது, சிற்சபையுள்ளே கற்பூர விளக்கஞ்செய்து வந்த தில்லைவாழந்தணரொருவர் தமது இச்சையால் அப்படிமீது நின்று பிள்ளைத்தமிழ் பாடுக என்று கூறி விபூதி தரப்பெற்றேன். அதேசமயம் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் பூஜாமணியொலியும், தீபதரிசனமும் கிடைக்கப்பெற்றேன். இவ்விரண்டு மொத்து நிகழ்ந்த திருவாணை சிரமேற்கொண்டு திருவருளே முடிப்பிக்குமெனத் துணிந்த எனது அறிவின் பருவத்துக்கிணங்க அத்திருவருள் விளக்கியவாறு இப்பிள்ளைத்தமிழ் முற்றுப்பெற்றது.

காட்டுகின்ற தாயினருளால் தந்தையைக்கண்டு தமது குறைகூறி நிறைவு பெற்றின்புறுதல் சேயர் கடனாதலால், உலகெலாமுய்யும் வழிகாட்டியருளுகின்ற லோகமாதா ஸ்ரீசிவகாமியம்மை பிள்ளைத்தமிழாகிய இந்நூலுடன் இற்றைக்கு நாற்பது வருஷங்களுக்கு முன் செய்து வெளியிட்ட சிவஸ்துதியாகிய தில்லைச்சிலேடை வெண்பா தனித்து நில்லாது சில குறிப்புரையுடன் பின்பு சேர்க்கப் பெற்றது. அறிவிற் சிறந்த பெரியார் இந்நூல்களிலுள்ள வழுக்களைப் பருவம் பெறாத சிறியேன் அறியாமையால் வந்தனவாக்கொண்டு அவற்றைத் திருத்தி விளக்கியருளும்படி பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
ராம. சோ.

125516

உ

சிவமயம்.

ஸ்ரீமந் நாவலர் பெருமான் மருகர் மகாவித்துவசிரோமணி
பொன்னம்பலப்பிள்ளையவர்கள் மாணாக்கருளொருவர்
உரத்தூர், கோ. வைத்தியலிங்கப்பிள்ளையவர்கள்
இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

வடவேங் கடந்தென் குமரி யாயிடை
நாடு தோன்றிய நாளிற் றோன்றிய
வியற்றமிழ் நாடி வகுத்தனர் நிறீஇப்
பாய்திரை பருகிய வாய்தமிழ் முனியுங்
காய்சின வழுதியுங் கண்ட செந்தமிழ்க்
கன்னி வளாகக் காரைநல் லூரன்,
பொன்னியல் வாணிகத் தொல்குடி புகுந்தோன்,
தன்மா புயரிய நன்மா பொல்கா
மழைபெய் நிலத்து முளைகண் டன்ன
வியற்கை யறிவு பெரிதே யதனொடு
செயற்கை யுணர்வுஞ் சிறக்க வுயர்ந்து
கடவுட் பூசனை யிடையறா வன்மையிற்
கண்ட காரணத் தானே யுலகம்
வன்றொண் டப்பேர் வழங்குமா முனிவனொ
டென்னுளங் குடிகொள் பொன்னம் பலப்பேர்ப்
பரமா சாரிய னெனுமிவ ருணர்த்த
வெழுத்துஞ் சொல்லும் பொருளு முணர்ந்து
விழுத்தகு பாட லணிபெற வகுத்தோன்,
வழுவாச் சீலம் வாய்மையிற் கொண்டோன்,
ஒழுக்கமும் பணியும் வழக்குறாப் புணர்ப்பிற்
பழக்கமு முண்மை யுணர்வும் பயின்றோன்,
பைந்தமிழ் நன்மொழிப் பாடல் சான்ற
முந்துபல் புராணமுன் னூல்பல நவிற்றியோன்,
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவர்

கைகண்ட போதங் கண்கண் டவ்வியிற்
கைதவங் கடிந்து செய்தவ முடித்தோன்
இறையு முயிருங் குறைபடு பிணியுமா
முப்பொரு ளமைவரு வைப்பின்வீ டென்னுஞ்
சொற்குப் பொருடா னேயல தில்லெனுஞ்
சைவசித் தாந்தத் தனிப்பெருஞ் சலதியுள்
ளாழ்ந்தறி புலவன், ஆகம சாரமும்
ஆண்டா னடிமைத் திறனுந் தெய்வ
மாண்டசீர் நான்மறை முடிவின்மெய்ப் பொருளும்
விளங்க வதுவே முழுதும் விளக்கி
விருந்தின் வகைபெறத் திருந்துசொற் றொடர்நிலைச்
செய்யுளிற் குழவி யன்புசிறந் தன்றான்
பல்லுயிர்த் தொகுதியும் பரகதி பெறுவான்
மெல்லென் மொழியான் விழுமியது பயப்பத்
தாயை வணங்கித் தாதையைக் கூடும்
பெருமையிற் றில்லை மூதூ ராடிய
முறைமையி னிறைவி பாகர்க்கு முறையே
பிள்ளைத் தமிழுந் தில்லைச் சிலேடையு
நல்லோர் நயவா வல்லோர் வியவா
வியற்றினன் வேயுறு தோளிபங் கன்னடி,
மன்னிய சொக்க லிங்கவே
ளென்னு நாமத் திருந்தவத் தோனே,

நாடி வழுக்களைந்து. வகுத்தனர் முற்றெச்சம். தமிழ்முனியுங் காய்சின வழுதியும் நாடிவகுத்து நிறீஇக் கண்ட செந்தமிழெனக. கன்னிவளாகம் பாண்டிநாடு. தன்மரபென்றது இவ்வாசிரியன் மரபினை. அம்மரபினோன் வன்றொண்டமாமுனி. என்னுடன் கற்றோனிவ்வாசிரியனென்றுணரப் பொன்னம்பலப் பேர்ப் பரமாசாரியற்கு என்னுளங் குடிகொள்ளென முன்னரடை கொடுத்தாம். ஒழுக்கமும் பணியும் புணர்ப்புமுணர்வும் முறையே சரியை, கிரியை, யோக, ஞானங்களாம்.. இறையுமுயிரும் பிணியுமென்றது பதி பசு பாசங்களை. ஆழ்ந்தறிதல் அனுபவம். இதனையே அழுந்தியறிதலென்பர் சிவஞான மாபாடியமுடையார். ஆகமசாரமென முற்கூறிப் பிறாண்டும் வேறுபடுத்து ஆண்டானடிமைத்திறனென வேண்டாது கூறினும், கூறியது ஆகமத்துட் சிறப்பு நோக்கி. பின் நான் மறைக்குமுன்னர்த் தெய்வமென வடமொழியாற் சுட்டலை

யடுத்ததாம், அதுதான் ஆரியவேதமெனற்கு. விருந்தின் வகை, பிற்கால
த்துப் புதுவதாகச் செய்யுள் செய்வார் செய்யும் நூல் வேறுபாடுகள்
அவை கலம்பகம், அந்தாதி போல்வன. பிள்ளைத்தமிழும் தில்லைச்சிலே
டையுமது. விழுமியது வீடியல் பொருள். பெருமையின் உவமம். பிள்
ளைத்தமிழ் பொருள். வானினுமுயர்ந்தோனகத்தியன் நிலத்திற் குடத்
தினடங்கிய குறுமுனியாயினான். சொல்லாற் பிள்ளைத்தமிழேனும் பொ
ருளாற் பெருந்தமிழென்க. வலிதன்றே தாழுந்துலைக்கென்ப. இனி;
ஊரன், புகுந்தோன், வகுத்தோன், பயின்றோன், முடித்தோன், புலவன்
சொக்கலிங்கவேளென்னுநாமத் திருந்தவத்தோன் விளக்கி விழுமியது
பயப்பப் பிள்ளைத்தமிழும் தில்லைச்சிலேடையு மியற்றினனெனவினை
முடித்தியைத்துகொள்க.

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௨	௧௧	யெனதிதம	யெனதிதய
௩	௧௬	முற்றுலைவ	முற்றுலைவு
௫	௧௩	ஈசஞு	ஈசாஞு
,,	௨௬	ெதந	ேதந
௬	௩	எடு	எடு
,,	௨௩	ெருஞு	ெறஞு
௭	௫	வயை	வகைய
,,	௮	ளறுகி	ளறுதி
௮	௨	மெய்ய்	மெய்ப்
,,	௫	பின்னை	பிள்ளை
௯	௬	ேனயனை	ேனயனைய
௧௦	௩	பாங்சை	பாங்கசை
,,	௯	வங்களாளா	வங்களா
௧௧	௩	காந்தரு	கர்ந்தரு
௧௩	௨௨	கியலற	கியிலற
௧௬	௧௬	லிவஞ்சி	லிலஞ்சி
,,	௧௭	கொள	கொள்
௨௨	௨௪	மாசைபை	மாசபை
௨௮	௨௪	——	வேறு
௩௨	௨௨	விளக்கு	விளக்குஞ்
௩௩	௨௯	மாப்	மாய்
௩௫	௧௮	டைக்செ	டைச்செ
௪௰	௨௰	ரத்ரா	ரத்தரா
௪௭	௨௭	பாசுத்த	பரிசுத்த
௪௮	௨௫	தாத்தார்	தரத்தர்
௪௯	௫	பாகி	பாகிய
,,	௧௦	அடுகரு	அடுக்கு
,,	௧௨	நிலம	நிலம்
,,	௧௪	ழும்பொ	ளும்பொ
,,	௨௰	கதது	கத்து
௫௧	௨	செயத	செய்த
,,	௪	வயிரம	வயிரம்
,,	௨௨	கங்தே	கங்கே
௫௨	௬	பொனம	பொன்ம
௫௩	௧௨	அந	அங்
,,	௨௯	கையுந	கையுங்
௫௫	௧௫	முகம்	மும்
௬௰	௧௫	செவவி	செவ்வீ
௬௧	௨௬	பங்க	யங்க

☞ இந்நூலிற்சில இடங்களில் எதுகை சிலேடை நோக்கி னகரத்துக்கு நகரஞ்சேர்த்துள்ளது.

உ

கணபதிதுணை.

தில்லைச்

சிவகாமியம்மை

பிள்ளைத்தமிழ்.

—(●)—

காப்பு.

சீர்பூத்த திருவருட் யேசெம் பூமியச்
சிவசத்தி பார்வை யாய
தெள்ளமுத நீரிற்கு ளிர்ந்தவழி யோங்கார
சின்மயா னந்த வித்தி
னேர்பூத்தெ ழுந்துபா சாங்குசங் கொண்டோர்கொம்
பிறுத்துவெம் பவம றைத்தோ
ரிலட்டுகந் தந்தைந்து தொழில்காட்டு மைங்கரமெ
னுங்கிளைகொ டன்பர் சாரும்
தேர்பூத்த நிழல்விரீஇச் சரியாதி முகைபோது
செய்யகாய் கனிக ணல்கிச்
சிவந்தருந் தில்லைமேற் சிகரிவாழ் கற்பகச்
செஞ்சரணை யஞ்ச லிப்பாம்
பார்பூத்த வுயிர்தழைய நடராச ராசரோர்
பாங்குகண் டணைய வமுதம்
பருக்குசிவ காமிதாள் பரவுமென் பிள்ளைமைப்
பாத்தொடைக் கருள்க வென்றே.

காப்புப்பருவம்.

ஸ்ரீமந் நடராசராசர்.

தனனதன தாத்ததன தனனதன தாத்ததன தனனதன தாத்ததன
தாத்ததன

திருநடன மூர்த்தி÷பிற சிவபதிகண் மீப்பொலிவ
திறமுறுமா கேச்சுரமே யாப்பு கனுறா
றிகழனைய மூர்த்தியவை தொகுநிலைம கேச்சுரமெய்
சிவணதனின் மேற்றிவள்சா தாக்கி யமுமேற்
பரவுருவ நாற்றிறமு மொருவியவை மேற்றிகழோர்
பரசொருப மூர்த்தியொரா தேர்த்த* திலைவாய்ப்
+பவனவுரு விராட்புருட னிதயமலர் மேற்பொலிபு
பரமநட மாத்தொழிலை யாச்செய் பவனை
விரைசெயவ னட்கமல மலரைநிகர் தாக்குபதம்
விரவமுடி சூட்டிவழா தேத்தல் புரிவாம்
விமலைபருள் கூர்த்தபரை யெனதிதப மாக்கலினும்
விரவியென தார்த்தியெலாம் வீட்டி யருள்வாள்
வரியகய லேய்த்தவிழி பொழியருளி னற்பனுயிர்
வகைகளுய வேட்டகலாள் ○ வாழ்த்தி யணியாய்
மகிழ்நடன நோக்கியமர் சிவைமலைய னற்றுதவ
மகளுருவம் வாய்ப்புறுமா காக்க வெனவே. (க)

ஈசான சிவன்

தானன தத்ததன தந்ததன தானன தத்ததன தந்ததன தனத்த தனன

மாதேவன் முற்றுயிரு ணார்ந்தனவுய் வானோது முற்சுருதி
தந்திரமுன் வகைக்கொ ளருணூல்
† வாழ்வானு ரைக்குமநு சங்கிதையென் வாய்பாடு டைப்பிரம
பஞ்சகமும் வயக்கு மதன்மே

÷ பிறசிவபதிகண் மீப்பொலிவனவாகிய திருநடனமூர்த்திகளென்க.
* திலைவாய் மாத்தொழில்களே பரமநடனமாகச் செய்பவன் பரசொருபமூர்த்தியே என்க. + பவனம்—உலகம். ○ அகலாள்—முற்றெச்சம். † வாழ்வான்—சீவர்கள் வாழும் பொருட்டு.

வீதாமெ னப்புகல்ச டங்கமும ‡ னேகாத சத்திலகு
மென்றுரைசெ யிவற்றின் முதலா
மீசான முத்திமரு வின்புருவ னேயாய ருட்செய்சிவ
னம்பொனடி யினைப்ப ரசுவாஞ்
சிதேவி யுற்றவுரு னன்பொடுதி யாகேசன் ¶ முத்தகுரு
நன்கிருவு திறத்த முறையாற்
றீசார்ம கப்பெறுமு குந்தனினை தீதேகு முத்திபெற
வந்தணிமை திருத்த முறவே
நீதாவெ னப்பரவி மன்றுபணி நேசார் தில்லைப்பதிபி
னென்றுநிகழ் நிருத்த மதையே
நீளாத ரத்தினொடு கண்டமுத நீர்தான ருத்துசிவை
யின்புரவு நிகழ்த்து கெனவே. (௨)

தற்புருட்சிவன்.

தத்ததன தானதன தத்ததன தானதன தனத்த தனனு

பைத்தமல மேவுமுயி ரத்தனையு மேழின்முறை
பயிற்றும் வினையாற்
பற்றுபுவி வானரக முற்றுலைவு ருதுரிய
பதத்தி னுறுகா
றுய்த்துரிய மாயையினில் வைத்துமறை யாமுன்வினை
யுடற்கண் விடன்மே
லொப்புவினை சார்புதரு தற்புருட மாசிவனை
யுளத்தி னினைவாம்
முத்தியொரு போதுதரி சித்தவர்கள் சேரவருண்
முழுக்கு நலமே
முற்றுபதி யீதெனவ னைத்துலகு மேவுதில்லை
முதற்ப தியிலே
மெய்த்தமறை நூறகர வித்தையெனு மாசபையை
விளக்கு சுடராய்

‡ மன் ஏகாதசம் எனப்பிரிக்க. ¶ முத்தகுஉரு—சோமாஸ்கந்தமூர்த்தி.

மெய்க்கொள்சிவ காமியனை யைப்பரசு மாபுரவு
வினைச்செய் கெனவே. (௩)

அகோர சிவன்.

தானதன தானதன தானதன தானதன தத்த தத்தன

நானிலைய வேழ்வகைய நாலிருப னுலெனுமி லக்க மெய்க்கொளா
நானிலமு மேனிலமு நாடியுழல் பேரனுர் நசித்தி ளைப்பொரூஉ
மேனிலைய வாவியுடல் வேறுபிரி யீறுவினை யைச்செய் மெய்த்தசீர்
மேவியவ கோரசிவ பாதமலர் மீதளிவி ளைத்து ரைத்துமால்
வானினிமிர் மாசிகரி மீதுறுவி லோதனம்வ ளித்தி றத்தினால்
மாறி ¶ யசை வானும்வினை மால்பிறவி மாசறவ முத்து முத்திசே
ரூனமினலாசையினர்சார்மினலர்போமினெனவுய்த்துணர்த்தமே
ரோதுதில மேவுசிவ காமியருளோவிலுமை யைப்பு ரக்கவே. (ச)

வாமதேவசிவன்.

தான தானதன தான தானதன தாத்தன

வீவி லாதுதொடர் மேலை நாளின்வினை வேட்கைபால்
வேறு வேறுடலின் வேறு வேறுசெயன் மேற்செலான்
மாவை மேல்வினையின் மாறு ருதவகை காக்குமோர்
வாம தேவசிவன் வாய சீரடிகள் வாழ்த்துவாம்
வாவி நாறருண வாரி சாதமலர் வாய்ப்புகூஉ
வான்ம ராளவிணை காழி வாழ்வுதுணை வாய்ப்பநேர்
மேவு சோதிபுகு வாய்மை யோதுதிலை மீப்பொனூர்
வேணி பாலைசிவ காமி யாய்ப்புரவு நோக்கவே. (ரு)

சத்தியோசாதசிவன்.

தத்தன தானதன தத்தன தானதன தத்தன தானதன தனதாத்தன

சித்தசா நீபுகுதி தெற்கினே காதுயர்சி ருட்டியார்
மேன்முகமு னெனவோர்த்தவா
தெற்றெனு வேகுமத னக்கமார் தீயினின சிப்புறு
வேகுமத னென வீழ்த்துமேற்

¶ அசைவான்–தொழிற்பெயர்.

றத்துவா தீதன்மண முற்றியே யாவிதரு சத்திதா
　　னேர்வருதன் முகநோக்கமாந்
தக்கசிர் சாலணைய சத்தியோ சாதசிவ சத்துசீ
　　பாதமலர் தனையேத்துவா
மித்தையே சீவபர நித்தமே யோர்பிரம மெய்க்கொணு
　　மேயதுவு மெனுமாற்றமே
விற்றுவாழ் சீவிதரு ணர்த்துபா ழாமனலின் விட்டிலா
　　காதுசிவ னருண்மார்க்கமே
முத்திவா யாமெனவு ரைத்துநாம் வாழவருண்
　　முத்தர்சார் வாயதிலை நகர்போற்றுசீர்
முக்கணுன் வாமநிலை யுற்றுவாழ் தேவியருண் முற்றுமா
　　தாசிவையை நனிகாக்கவே. (சு)

ஈசனுதி ஐந்துமுகங்களாகிய பஞ்சப்பிரமமந்திரரூப சதாசிவமூர்த்தியினது இருதயமுதலிய அங்கசத்திகள் ஆறும் மற்றையர்க்குள்ள அங்கங்கள்போல்வனவல்ல. அவை சத்பாவமுதலிய ஆறுகுணங்களேயாம். இதனைப் பௌஷ்கராகமம் பதிபடலம்.

ஸத்பாவோ ஹ்ருதயம் தஸ்ய — ஸத்பாவோஹிருதயம்தஸ்ய
ஶிரஸ்ஸர்வோச்ச்ரிதோ குண: — சிரஸ்ஸர்வோச்சிரிதோகுண:
வஶித்வமபராதீநம் யா ஶிகா ஸோபரிஸ்திதா — வசித்வமபராதீநம் யாசிகாஸோபரிஸ்திதா
ஸ்வபாவ குப்தமந்யேஷாம் ஸமர்த்தமபி கோபநே ॥ —
தேஜ:கவசஸாதர்ம்யாத்தந்நாம்நா வ்யபதிஶ்யதே ॥ *
- ஸ்வபாவ குப்தமங்யேஷாம் ஸமர்த்தமபிகோபநே,
* தேஜஃகவசஸாதர்ம்யாத்தந்நாம்நாவ்யபதிச்யதே.|
- ஸர்வஜ்ஞதாயா யத்பீஜம் - ததஸ்தேந நிரீக்ஷணம் *
ஸர்வஜ்ஞதாயாயத்பீஜம் ததஸ்தெநநிரீக்ஷணம்.

யோஸாவப்ரஸஹச்சம்போ: - ப்ரதாபோஹேதிருச்யதே॥
யோஸாவப்ரஸஹச்சம்போ: — ப்ரதாபோஹேதிருச்யதே॥

என்னும் வசனங்கள் விளக்குகின்றன. இவற்றைப்பின்வரும் ஆறுசெய்யுட்களினுங் கூறப்பெறும் அவ்வாறு குணங்களுக்கும் முறையே ஒவ்வோர் எடுத்துக்காட்டாகக்கொண்டுண்மை தெளிக.

இருதயசத்தி

தந்ததன தாந்ததன தந்ததன தாந்ததன தத்ததன தந்த தனனா

ஐந்துவகை யாஞ்சிவன தங்கமென வாய்ந்தனவ
 யற்சுரர்க ளங்க வகைபோ
லன்றிறைவ னேங்குகுண மென்பர்மறை யாய்ந்தவர்க
 ளத்தகுச டங்க முதலாய்ச்
சந்திரனை வார்ந்தசடை யின்கணுற வேய்ந்தசிவ
 § சத்தியல்பி தென்று புகல்சீர்
தந்தியல்பின் யாண்டுமொளிர் கின்றவித யாங்கசிவ
 சத்திதனை யன்பி னினைவா
மந்தமறை தான்பரவ நின்றபதி யோங்கிதெனு
 மத்தலைமை யென்று முணர்வா
யங்கணுறு மாந்தர்களை நன்றினிது கூந்தொனிய
 தற்கு முறழ் கண்டை பொலிநீண்
டெந்தையருள் கூர்ந்ததளி முன்றெருடர்பி † னீண்டுதிலை
 யிற்பரவு மின்ப நிறைவா
யென்றுமுடன் வாழ்ந்திலகு மம்மையுமை சாம்பவியி
 னைப்புரவு நன்று செயவே. (எ)

சிரோசத்தி

தனனதன தந்தன தனனதன தந்தன தானத் தனத்தன [மேற்
பெரிதுபெரிதென்றெரோர்பொருளையுமிருந்தவாபேசிக்கழித்து
பெரிதிதனிலின்றெனுமறைபுகலுகின்றதோர்பேருற்றசைக்கொண
துரியவுயர்வென்பதோர்குணமிதெனநன்குசீரோவற்றெடுத்துநூ
லுரைசிரசெனங்கமாதேவிபதமன்பினுலோதிப்பழிச்சுவா
மரிபிரமரிந்திராதியசுரர்கள்வந்துநாவாரத்துதிக்கநே

---

§ சத்தியல்பு—சத்பாவம். † ஈண்டு—வினைத்தொகை.

ரனுகினவர்முன்புசாரடியவரொருங்கிநோராகத்திளைத்துளா
ரிரிமினெனுநந்திகோலினின்விலகிநின்றுமேலேகக்கடைக்கணு
ரினியதில்லையந்தண்மாநகரிலகவென்றும்வாழ்தாயைப்புரக்கவே.

சிகாசத்தி

தன்னதன தானதந்த தனனதன தானதந்த தனதனத் தனத்த தனனு

அரிபிரம ராதி துன்று பலவயை சீவ ருந்த
னருள்வசத் தடக்கி யொருதா
னவர்வசமு றுதெ மூந்தன் முதன்மைமிக மாக மங்க
ளறுகியிட் டுரைப்ப மிசைமேய
யொருவரிய தாய்வி ரிந்து நிலவுபொரு ளாய்வி ளங்கி
யொளிர் வசித் துவத்தொல் குணமா
யுரைசெய்சிகை யாயவங்க மெனும் விமலை பாத மென்று
முளமுறத் துதித்து விழைவா
மரனருளி னுல்வை குண்ட மமரரியும் வேத னுந்த
மருநகர்ப் புரப்பு முனியா
வமலனருள் கூர்வ துந்து புடவியென வேநி னைந்த
வவனியிற் பிறப்பு மருவா
துரியநம நாள்க ழிந்த தெனவிழையும் வாய்மை நன்றி
புயர்புவித் தலத்தின் முதலா
யொளிர்தில்லையின் மேவு மங்க ணமலைசிவ காமி யம்பை
யுருவினைப் புரக்க வெனவே. (கூ)

கவசசத்தி

தத்ததன தய்ய தந்த தத்ததன தய்யதந்த நான த் தன த் தனனு

எத்துணைய வல்ல பஞ்சி யெத்தகைய தெவ்வருந்த
மேதப் பயத்த வினைமே
லிட்டிடர்கள் செய்ய வந்து சுற்றிடினு முய்தல் பொன்ற
வேதற் புரக்கு மியல்பா
மத்தகைய செவ்வி யங்கை யிற்றிகழு நெல்லியென்ப
தாகத் திகழ்த்தி யெணையோர்க்

கப்புரவு செய்த வின்கண் முற்றுநிறை வல்ல பங்கொ
டார்மெய்ப்பை யொத்தொ ளொளியாச்
சித்தமுறை செய்தி டுந்திண் மெய்க்கவச திவ்ய வங்க
தேவிக் களித்து முளமே
செச்சை மலர்பெய்யு மம்பு யத்திளைய பிள்ளையின்பு
சேரத் திருக்கை மடிமேல்
வைத்துலகு செய்ய சந்த திப்பயன்மு னெய்தி யன்பின்
வாழத் திருத்தி யருள்கூர்
மைக்கணுமை தில்லை யம்ப திப்பரவு மவ்வை யெங்கள்
வாழ்வைப் புரக்கவெனவே. (க0)

நேத்திர சத்தி

தானதன தாத்த தன தானதன தாத்ததன தந்ததன தத்த தனனு

ஏனையர்க ளோர்த்திடவொ ரோர்பொருள்சண் மாத்திரமு
ணர்ந்திடுமொ ரற்ப வுணர்போ
லேதமது ருத்தகையின் யாவுமொரு சேர்க்கையினி
யைந்துணரு முற்ற றிவுசார்
வானவுயிர் வாய்ப்பவருண் மூலகநி ரீக்கணமெ
னங்கமிதெ னத்தி கழுமே
லாமினிய நேத்திரசு தேவியடி வாழ்த்தி நித
மன்புறநி னைத்தல் புரிவாம்
* மானவில்பொய் யாற்கரிய மேனியர வாய்ப்புகமு
னிந்துடனி ரக்க மலிவான்
மாறுமிதுன் மாக்கவலை மாறுகென வோர்த்திறைமுன்
மைந்தனத ருட்செ யுருவோர்
● கானல்விழி நோக்கருளி நோயுமது தீர்த்திடமெ
ருந்துமருள் கர்த்தி ருவமா
காரணியை யேர்த்ததிலை வாழுமையை மீயத்துறவு
கந்து செய்பு ரத்த லுறவே. (கக)

* மால்நவில் எனப்பிரிக்க. ● கால் நல் எனப்பிரிக்க.

அஸ்திரசத்தி

தானதன தானதன தத்த தாந்த தானதன தானதன தத்த தாந்த
தானத்த னத்தன

வீரமென வோதவரு பெற்றி தாங்கொண் மேன்மையுறு
மாதன்முன மிக்க வாஞ்சை மேவித்து தித்துளோர்
வீறுபெறு வானருள்செய் சத்தி மான்பொன் வேணியர
னேயனே பெற்றி தான்றன் வீரட்ட மெட்டுமே
தேரவுணர் வானிலகு மெய்த்த நான்கு சீர்மறையு
மோதுமின திட்பம் வாய்ந்த தேவற்கு ரித்த தாய்த்
தேவர்பிறர் கோணினைவு மற்ற தாங்கொ ணுதபிர
தாபமெனு மத்தி ராங்க தேவிக்க ருத்தி புரிவாம்
வாரமுத மேயகடு முட்ட மாந்தி வாழ்துமென
வார்கலிம திப்ப + நேர்ந்த வாழ்வெற்கெ னக்கென
மாவைமுத லாயபொரு ணச்சி யாங்கு மாவிடமு
ணேடிநிலை கெட்டு மாய்ந்த வாதைக்கி ரக்கமாய்க்
கோரவிட மாரமுதெ னக்கொ டார்ந்து கூவமா
ராவிபெற முற்றி யாண்ட கோனுக்கி டத்தின்வாழ்
கோதைதிலை மாநகரி லுற்றி யாங்கள் கோதையற
வாழ்சிவையை யற்பி னேம்பல் கூடிச்சி றக்கவே. (கஉ)

காப்புப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

திருமேனி யினதேசின் விரிவாய பலகோடி செகதண்ட வரிசை யாவுஞ்
சேர்முறைபி னேவங்தொ டுங்கவா ளாசச் சிதானந்த ரூப வாழ்வா
யொருவாத மர்ந்தநீ யரிதாகு மிந்நிலைமை யோர்ந்தெமைச் சீவ ராசி [ந்து
யுற்றுவாழ் பெற்றியென புற்றுமோர் வுற்றனைய வுலகெலா மெளிதுணர்
பெருவாழ்வு றத்திருவு ளங்கொண்டு சீவரிற் பிள்ளையென முன்னி யற்று
பெருந்தவத் தாலிமா சலன்முனோர் பால்வந்த பெற்றியாலன்னையுன்னைத்
தெருள்கூர மகவாயு வக்கின்ற வெம்முனஞ் செங்கீரை யாடி யருளே
தில்லையரு ணடவாமி சொல்லரிய சிவகாமி செங்கீரை யாடி யருளே. (க)

+ நேர்ந்த—இரண்டனுருபு தொக்கவினையாலணையும்பெயர். பரிந்தவெறி

வேதமுடி பாதுகையின் மீதிலகு பாதமலர் மெல்லணை விளங்கு மாதன்
வித்தியா மேனிசய னிப்புறவொர் தாணீட்டி விரைமலர்ப் பாதமொன்றப்
போதணைம டித்தூன்றி யம்புயத் திருமுகம் பொற்பவிரு பாங் சைக்கும்
போதுநேர் காணறிஞர் மன்றநட நாதனிரு பொன்னடிக ணீட்டி யூன்றி
மேதகப் புரிநடன நோக்குவார் பூமியுற வீழ்ந்திறைஞ் சுதலு முடனே
வெய்யவினையோடுதலுமையநீவாவென விழைந்தழைத்திடலுமோர்க்குஞ்
சீதநிலை யெனமகிழ்வ ராதலா லம்மைநீ செங்கீரை யாடி யருளே
சிவமேசெய் தில்லைமாநகரின்மேவு சிவகாமி செங்கீரை யாடி யருளே. (உ)

உலகிலுள சீவகோ டிகளாய பிள்ளைகளை யுணர்பக்கு வங்களா ளாக
வோதுசோ பானநிலை வைத்துனரு ளாயநீ ருண்முழுக் காட்டி மேன்மேற்
செலவுய்க்குமுலகன்னையாயநீயோங்கலிறைதேவியாமேனையெனுமோர்
சீவனைத்தாயெனவொர்மகளாகியவளுனைச்சேய்முறைமைகொண்டுபேணி
யிலகுதன் கணைக்காற் கிடத்திநீ ராட்டியு டனீரம்பு லர்த்த விரைவா
யினியவொற் றுடையிட் டொண்சுணம் பூசிமார் பினிலணைத் துச்சிமோந்து
திலகமிட் டின்புறப் போந்தநீ யாதலாற் செங்கீரை யாடி யருளே
தில்லையம் பதிமேவு செல்வியெஞ் சிவகாமி செங்கீரை யாடி யருளே. (ங)

காட்டுவித்தாலெவர்கள்கண்டிடாரென் றுமேற்காண்பரார்முன்புகாட்டாக்
காலெனவுமறையுடன்பாட்டினருள்செந்தமிழ்க்கவின்சுருதிவாய்மையாரும்
வேட்டுணர்ந் துய்கெனக் காஞ்சிமுன் னம்பதியின் விமலசிவ பூசை நீயே
விளக்கியாங் குனைமேனை மென்கணைக் காலென விளம்புபீ டத்த மைத்தே
யீட்டுமணநீராட்டிவெண்காப்பணிந்திறையொடென் றும்வேறன்மைகாட்டி
யியலெழில்க ணேறுறு தரியமணி யாரமுனெ லாம்பூட்டி யன்பு நீட்டுஞ்
சேட்டிளங் கோலநேர் கண்டெளிய மின்புறச் செங்கீரை யாடி யருளே
செல்வநிறை வளமேவு தில்லையமர் சிவகாமி செங்கீரை யாடி யருளே. (ச)

அரிபிரமன் முதலமரர் பலவகைய பிறவிகள டுத்தனைய சார்பு பற்றி
யயர்வினையர்மலசகிதரிதுசாரதமவர்சரிதமவைகளுமுணர்த்துமவர்போல்
வருபிறவிபகவழியினொருபொழுதுமொருவிதமுமருவுகிலன்மாதேவனே
மலரகிதன் வினைகருவி கொடுசெய்கில னெனவறிய வாயநிக மாக மங்கள்
விரியவுரையனையநடனபினைபவவினையிலிவிராட்டிதயமலரினிலைபோல்
விழைமலையன்மகளினுறுதினமுமனகமலமலர்மிசைவடிவமுற்றிருந்தாய்
தெரியவுயி ருளமலர்தொ றமர்தனின செயலமலை செங்கீரை யாடி யருளே
திருவருள்செய்தில்லைநகரினனவரதமருவுசிவைசெங்கீரையாடியருளே. (ரு)

வேறு

செம்பவ ளம்புரை யும்பத முன்பணி சீவர்க ளன்பேறச்
செல்வமு மெய்தரு கல்வியு நல்குபு தீமைய கன்றூரு
மிம்பரி னன்பல வின்பநு காந்தரு ளீகைவி ழைந்தேவா
ழில்லற நல்லற =மல்லன வில்லற வேமுறை நின்றோருந்
தம்பொரு ளென்றுரை சந்ததி முன்பல தாவின லஞ்சார்பு
தையலர் மையல்கொய் துய்வகை மெய்யருள் சார்நில தந்தாளு
மம்பிகை நந்திரி யம்பகி சுந்தரி யாடுக செங்கீரை
யல்லொழி தில்லையி னெல்லையின் மெல்லிய லாடுக செங்கீரை. (சு)

முத்தல னுற்றுழல் பெத்தர்கள் பைப்பைய மோகற வான்றோர்கண்
முற்புகு நற்றிற னுற்றவர் பொற்பத மூதலர் தாழ்ந்தாய்ப்பு
தத்துவ முப்பொரு ளுய்த்துணர் வுற்றிருள் சார்மல மாய்ந்தேகத்
தற்செய லற்றொரு தற்பர மெய்ப்பதி தாளிணை யாய்ந்தார்தண்
புத்தலர் முற்கொடு மெய்த்திற லர்ச்சனை போதமுன் வாய்ந்தேசெய்
பொற்பினி லத்தகு முத்தியி னித்திய போகம தார்ந்தார
வத்துவ சுத்திசெய் துய்த்தரு ளுத்தமி யாடுக செங்கீரை
யற்புறு பொற்சபை யிற்பொலி சிற்பரை யாடுக செங்கீரை. (எ)

கவுணியர் மலமறு நெறிசெல வளநிறை காழியி ‡ னம்போரு
கனதட மிசையுயர் கவுணியர் குலம்வரு கான்முளை யென்றோதச்
* செவிநிறை ரவிபல தொகுமொளி யுருவொடு சேர்தவ முன்பேசெய்
சிவபத விருதயர் பகவதி யனைபெறு சேயினில் வந்தேனைப்
பவமிகு சமண்மத முதலிய படியிருள் பாறிட வின்பேறு
பரசிவ நெறியுல கெவைகளு மொளிர்வகை பாவிய நன்பேசெய்
தவிர்தரு குகமக வருள்பரை திரிபுரை யாடுக செங்கீரை
யனநிறை கனசபை தனிலொளி ரனசிவை யாடுக செங்கீரை. (அ

மலவிரு டெறுகுழன் மதிகுறை யிரிமுக மண்சே ணின்பார
மவியருள் பொழிவிழி ¶ வாவுயி ருயவருள் கென்றே நின்றோது
மிலவிதழ் ○ வரன்மொழி யமுதுணு மிருசெவி பொன்று நின்றே ●ரி
னிறுதியில் கலனணி களனிக பரசுக மிங்கா ருஞ்சாரு
நலனருள் கரமலர் கவுணியர் குலமணி நன்கா ருந்தூய

= அல்லன—இல்லறத்துக்குவிலக்கானகுற்றங்கள். ‡ அம்போருகன—பிரமனது. * செவி—இடைக்குறை. ¶ வர—விளி. ○ வரன்—நாயகன்.
● இன்—உவமஉருபு.

நறையமு தூறுகட னகின்மூத லினவெழி னன்றே கண்டோகை
திலைநக ரிறைகொள வணியம ருலகனை செங்கோ செங்கீரை
சிவைபக வதியுமை யிமகிரி பெறுசுதை செங்கோ செங்கீரை. (௯)

நான்மறை நீண்முடி சாரமி தாமென நன்றோர் பன்பாலின்
நானில மேனில மார்பவர் பேணுநர் நந்தா வின்பார
மேன்மறை வேதிய னும்மணி வாசக மின்பா லன்றேகி
¶ வேள்பணி வோடியல் சீடனி னீள்கர மென்பூ மொந்தாலு
மாமணி வாசக நான்வரை வேனென வண்பா தந்தேடு
மாசபை மீதுமு வாயிர மாணவர் மன்பே ரன்போர்முன்
+ சேமணி தேசிக னுயருள் வான்மனை செங்கோ செங்கீரை
தேவிய லார்தில மாநகர் வாழ்சிவை செங்கோ செங்கீரை. (௧௦)

சேங்கீரைப் பருவமுற்றிற்று.

தாலப்பருவம்,

சிவமாந் தன்மைப் பெருவாழ்வு சீவர் பெறுவா னவரிதய
திவிய கமலந் தொறுமினிய தேசிற் றிகழ்தா ரகவுருவிற்
பவமாய் வுறவீற் றிருந்தருளும் பரைநீ யதனை விளக்குதற்கோ
பரவி நோற்ற தக்கனெதிர் படர்கா ளிந்தி பங்கயத்தி
னவமார் சங்க மாய்விளங்கி நாடி யெடுக்கு மவன்மகளாய்
நண்ணும் வேத வல்லியுனை நயந்து தாலாட் டிடவளர்ந்தாய்
தவமார் தில்லை யமர்ந்தருளே தருதாய் தாலோ தாலேலோ
சமயாதீத சித்தாந்தத் தனியே தாலோ தாலேலோ. (௧)

பயமா ருததி யெழுந்தரிமுற் பலவா னவர்க்கும் படர்செய்விடம்
பரமன் றிருமு னின்சார்பிற் பலமற் றொடுங்கிற் றென்பானி
வியனு ரெவர்க்கும் வசிப்பரிய விமல னின்சொல் வசமாவன்
விழைவ னினதா ருணைக்கே விரவு நினதா லோகனத்தின்
வயனு யுனையே பார்த்தமர்வன் மருந்துன் மொழியா ரமுதெனவே
மாந்திச் சுவைகூர்ந் தின்புறுமிம் மாண்புற் றிலங்கு மலோகநிலை
மயிலே குயிலே மடவனமே மானே தேனே தாலேலோ
மல்ல னிறையுந் தில்லைநகர் மணியே தாலோ தாலேலோ. (௨)

¶ வேள்-வினைத்தொகை. × சேமணி-விடையில் வருமணி.

சீவர்மூன்று மலமுதல திரிமா சொழித்து முப்பொருள்க
டெரித்துமுப்புண்டரங்கண்மணிதிருவைந்தெழுத்தாஞ்சாதனமூன்
றாவலுறமேற்கொண்முறையோர்த்தடிசேர்த்தருணின்செயல்விளக்கி
யத்து விதமாய்ச் செஞ்சோதி யமல னுடன்சார் புணர்த்திடவோ
மேவு மகாங்கி மூன்றாண்டின் மிளிரு மகளாய் விளங்கினையம்
மேனை போலக் காஞ்சனையும் விழைதென் னவனு மெடுத்தணைத்து
மாவன் பினராய் வளர்ப்பவருள் வழங்கு மனையே தாலேலோ
மறையா கமம்போற் றெழிற்றில்லை வாழ்வே தாலோ தாலேலோ. ௩

சனக னானே பிரமமெனுந் தருக்கோர்ந் தீச னருளான் ● மா
தனஞ்சார்கெனுநாரதனைமுனீஇத்தனின்மேலீசனிலையென்றல்
வினவி யிபமா முகற்பணிந்து விளம்ப மூதுவே தியனிலவண்
மேவி || யுளவந் தனவெல்லா மிசைந்தும் பசிமே லெழல் கூறித்
தனில்வந் தெவையு மொடுங்கனக சனகன்றானென் றோர்த்தொருவேன்
றனக்கோ ருணவுந் தந்திடாய்நீ தானோ பிரம நின்பிரமத்
தினைவெந் நெருப்பி லிடுகென்மக வீன்ற பிடியே தாலேலோ
யெம்மையா ளுமையே தில்லைநக ரினில்வாழனையே தாலேலோ. (௪)

முன்னை நலந்தீ தாலிம்மை முதந்துன் பியைந்த வெனுமுலக
மொழியால் வினையு முயிரிலையேன் முற்றா வினையா லுயிருமவை
யென்ன செயலுந் தாமேசெய் வின்மை யதனா லியக்கிறையு
மென்று முளவென் றனுமித்து மெய்ய லாமீ தோராமற்
பின்னு மலக்கட் டுளதனையே பிரம மெனலாற் சனகன்மலம்
பிறங்கு ஞானுங் கியலறநின் பிரமந் தீசேர்த் தெனுமகவு
தன்னை நோக்கு பிரணவத்திற் றந்த தாயே தாலேலோ
தகைசார் தில்லை நகர்வாழ்வு தருதற் பரையே தாலேலோ. (௫)

வேறு

சனகனெ னும்பெய ரும்முனை நின்னொழி றண்ணடை முற்றோம்ப
றன்னகர் வைதிக சைவத் திரிசிர தாபதன் மாமிடியா
லனமிசை வும்மில னெனவிள கிலைநின கம்பிர மச்சார்பா
லழிந்தது நின்பொரு ளெம்முண வுந்நிறை வாகா தவன்மனையா

● மாதனம்—பெருஞ்செல்வம். || உள—அச்சனகன்மனையிலுள்ள உணவுப்பொருளும், வந்தன—அவனாணையால் அவ்வூர் அயலூர்களிலிருந்து வந்தபொருளும்.

மினியவி ரோசனை யோராறு கானிறைவெய்தின மவ்விருவோ
ரெய்தினர் மாநிதி யெம்மடிமைத்திறனே செய லாலெனவா
தனையற வருள்புரி மதகரி தருபிடி தாலோ தாலேலோ
சைவமி குத்தொளிர் தில்லைநகர்ச்சிவை தாலோ தாலேலோ. (௬)

இன்பம்வி ளைந்தும தெய்தமு யன்றுமி டைத்துய ரெய்தவசைந்
தினைவுறு மோபிர மம்மிது நின்னிடை யெய்தல றிந்தனமெ
யன்பிலர் சோடிவ ழங்கினு நாமணு வாதறி ருத்தியுரு
மணுத்துணை நல்கினு மன்பர்கள் கோடிய திற்பெரி தாக்கொள்வோ
மென்பது நின்னிடை நந்திரி சிரன்மனை யாளிடை யின்றோர்ந்தா
யினிநமை யிறையென னினையடி யவனென வெய்சன காவெனவே
தன்பவ ளத்திரு வாய்மலர் சேய்தரு தாயே தாலேலோ
தனைநிகர் தில்லைநகர் திகழ்தர வருசிவை தாலோ தாலேலோ. (௭)

செய்வினை % செய்பவர் செய்வித் திடுமுதல் சேர்பய ளுதியெலாந்
தெய்வத் திறனொளிர் சைவத் தலதில்லை தேர்கென வவ்வாய்மை
யெய்வகை யாலுப தேசமு றைப்படி யேமிது லாபுரிவா
ழிறைவற் கருளியங் நெறியுற் றவன்முன மெய்திய பாழ்மார்க்கத்
துய்வகை யிலையிது மெய்யென வேதுணி புற்றெழு கன்னோனை
யுயர்தரு ஞானச னகனென மேற்பெய ருற்றிட வைத்தேசற்
சைவம்வி ளக்குக யானன சந்ததி தந்தாய் தாலேலோ
தைவிக தில்லையி னுய்வருண் மெல்லிய லுலோ தாலேலோ. (அ)

வாவியின் மீச்சுட ருய்க்கும கார்சிலர் வாலிய தர்ப்பணமேல்
வயங்கிய வோர்சிறி தாயமி தப்பினில் வைத்தொரு தீபமதை
யோவற மொல் * லொலி சென்னெறி யுய்த்திட வோதுமங் நீர்மீதே
யுறுவது திருவரு ளொளியுள மிலகுற வொண்டிரு வெண்ணீறே
பாவிய மேனிவி ளங்கிட வார்கலி பண்ணிய முன்னோன்பு
பயனுற வுலகுய வரசுகள் சொற்றுணை பற்றுபு கன்மிதப்பிற்

% இதனை
"செய்வினையுஞ் செய்வானு மதன் பயனுஞ் சேர்ப்பானு
மெய்வகையா னுன்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே
யிவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
வுய்வகையா லரனருளாற் பொருள் சிவனென் றுணர்ந்தறிந்தார்"
என்ற பெரியபுராணத்திருவிருத்தத் தாலுங்காண்க. * ஒலி—காற்று

றுவற வேசெல னேர்திலே வாழ்பரை தாலோ தாலேலோ
சண்பையில் வந்தரு ளுங்குக மைந்தன தாயே தாலேலோ. (கூ)

நித்திய தத்துவ நிர்க்குண தற்பர நிட்கள மாதேவன்
நிகழ்திரு நடமுறை நியதியின் வழிபடு நேயர்க ணீராட
நத்தொலி வாவியி னுற்றரு ளும்புய நாண்மலர் நீணிரைக
ணறைநுக ரளிநிரை யொலிசெய மேவுத ளுடுபு முன்னுளி
லத்தகு ருத்திர பசுபதி யார்புன லாகள மாய்நின்றே
யன்பினு ருத்திர மாமநு வோமுற வார்செப நேர்காட்டு
மித்தட மென்றளி கூர்திலே மாநக ரெந்தாய் தாலேலோ
வேமச பாநடன் வாமநி லாவுறு மின்பே தாலேலோ. (கo)

தாலப்பருவம் முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

ஒப்பாரி லான் × முனையு மப்பாவனுதீதனுள்ளபடிதன்னருளேயே
யொட்டிநின்றன்பறிவுபெற்றபெரியார்களருளுற்றதுணையாக்கொடதனு
லெப்போது நேருணரு மப்பாவ னைக்கெளிய னேபுண்ட ரீக புரம்வா
ழீசனென மெய்கண்ட சித்தாந்த சைவநூ லேத்துமே கம்பனடியை
முப்போதும் வழுவாம லக்காஞ்சி மாவடியின் முந்துலகெ லாமுய்யவே
முன்னியாகமமுறையினன்னைபூசனைமுயற்சியால்வேணிமூடிமேற்
றப்பாவி ரைக்கொண்மலர் † சப்பாணி கொட்டியவள் சப்பாணி
[கொட்டியருளே
சற்பாவ * முற்றிதயமெய்த்தேவுளத்தமலசப்பாணிகொட்டியருளே. க.

காதலா லெம்மைநீர் சப்பாணி கொட்டுமா கழறுதற காது நாமோ
காணரிய பல்கோடி சீவரா சிகடந்து கருமவழி யூட்டு மாதா

× முனையும்பாவனை—முனைத்துநின்று செய்யும் பாவனை. அது யோக நூலார்கூறும் நால்வகைத்து. இந்நான்கையும், "பாவனையேற்றனசத்தாம்" என்ற மெய்கண்ட வெண்பாவிற் கண்டொழிக்குக.

† மலர் சப்பாணி—மலரோடுகூடியகீர். சப்பாணி—சகபாணி யென்று பகுக்கப்பெறும். *—உற்றவென்னும்பெயரெச்சத்தகரம்தொக்கது.

வாதலா லென்றியே லேனையரின் வயினொந்த ளித்ததிலை சங்கற் பமே
யன்னதுங் கன்னியென நின்னைநூ லோதுமுறை யாற்றெளிதுமீதல்
[லதூஉஞ்
சேதனாசேதனமெனாவுரைசெயுலகெலாஞ்சேர்முறையொடுங்கு மந்நாட்
சிவனொருவனேயாற்றுநடனநேர்சப்பாணிதிகழ்தாளவொற்றிசைப்பாய்
சாதறீர்ந் துலகுய்ய மகளுமா யினையம்மை சப்பாணி கொட்டி யருளே
சைவவியன்மணநாறுதில்லைவருசிவகாமிசப்பாணிகொட்டியருளே. ௨.

செனனமர ணாதிகளி னுழல்சமல சீவநிலை சேர்தேவ ரூரமர்ந்து
திண்புவியி னோராசு தன்பழைய ராவியுயல்செயவேண்டவாங்ககந்தை
முனையமகியுயிர்வெருவவிம்பர்வந்தெம்பிரான்முடி நுனித்துஞ்சியங்கோர்
முனிமிச்சிலாகியேசெவியின்வந்தென்புசார்முதுகங்கைநதிவியப்ப
வனகசிவ னோர்மலய முனிவனால குய்பூச னாதிகட் காகவேண்ட
வனையன்மந்திரகலசமுற்றைங்கைமுதல்வனாலருட்காழிநந்தனஞ்சார்
தனைநிகரில் காவேரி வருதிலையின் மாதேவி சப்பாணி கொட்டியருளே
சகசமலமால்விண்டபெரியருளமேவம்பைசப்பாணிகொட்டியருளே. ௩.

எந்நாடு நீரின்றி யமையாமை யாலவைக ளெவை யுநதி யோடை கூவ
லிவஞ்சிமுன்னாயநீர்நிலைகள்பலகொண்டுறினுமீண்டுமந்நீர்களெல்லா
சென்னாடுவேணியிறைதன் கயிலைமுன்கொள்சிவ தீர்த்தவமுதேவ ழங்கத்
திவியகுண்டிகையேற்றுமுனிகொணரவிபமுகன்செம்பரிச மேன்மையு
[ஞ்சார்ந்
திந்நாடெ லாமுய்ய வந்தசிவ தீர்த்தமென் றேந்துகா வேரி நேர்த
லின்மையானீர்நாடெனும்பெயரநாடொன்றுமெய்தாதுபொனாநீக்கியே
தன்னாடு நீர்நாட்டுளுயர்தில்லை வாழன்னை சப்பாணி கொட்டியருளே
தத்துவாதீதநிலைமுத்தர்நேர்காணமலைசப்பாணிகொட்டியருளே. ௪.

கங்கையினு மிக்ககா வேரிநீ ருண்டெழுபு களைகடப்பெ றீஇவ ளர்ந்து
கதிர்நீட்டு செந்நெற்கள் கன்னனிரை சூழவக் காப்பின்பு றந்துநிரையா
யங்கமுகு சூழநின் றினியபய னுதவலா னருள்வேத வாக மத்தி
னரும்பொருள்வி ளக்குதே வாரதிரு வாசகம தாதிதமிழ் வேதநீருண்[டி
டெங்குமொளிகொண்டெழுந்தமணாதிளை கழியின்மணிமுனோரினீங்
யிலங்குசை வப்பயிர்நம் வனிதைநா யகியமைச் சிவாகம் புறம்பு காப்பச்
சங்கைதவிர்பயனல்கனேர்தில்லைவாழன்னைசப்பாணிகொட்டியருளே.
சமயமறு வகைகளினு முறையமைய வருளிறைவி சப்பாணி கொட்டி
[யருளே. ௫

வேறு

புன்னில மிக்குள வேனைய நாடுகள் போலா தெஞ்ஞான்றும்
பொற்புறு நன்னில மிக்கவை நென்னிறை பூரண மாண்பயனே
மன்னுற நல்குவ வாயுமுன் முர்க்கமெண் மாடமுன் னாயசிறு
வகைகளு நல்லுத னிகரறு சைவநன் மார்க்கம தொன்றேமற்
றர்விய நெறிகளை யுந்தனி படிமுறை யாக்கொண் டவனுறுவார்க்
கற்பப லன்முன ளித்தொரு வாதமெய் யானந் தந் * தரனேர்
கொன்னுறு தண்புன னாடுபு ரப்பவள் கொட்டுக சப்பாணி
கோதறு தில்லையின் மீதொளிர் மெல்லியல் கொட்டுகசப்பாணி. (௬)

பூமக ளாரிரு தேவிக ணாயக புருடோத் தமனெனுமால்
போற்றுநி னாகற் கோர்வித சத்தியெ னப்படு பொற்பதுமெய்
யாமெனன் மோகினி யாய்த்தழு வாமல ரயன்மத னாபிமனத்
தளித்தரி யாகும ரற்பெறு போர்த்தன னவர்நும தளிவதியார்
தாமகிழ் நீயருள் † செய்களின் மோகினி தந்தசி ரூரதனாற்
றண்புனல் பால்சுவை போலுட னார்சிவ சத்தியென் ¶ வாயோர்ந்தாங்
கோமகன் மாமக ளாயருள் கோமளை கொட்டுக சப்பாணி
குன்றென நீடிலை மன்றினில் வாழ்சிவை கொட்டுக சப்பாணி.(௭

மங்கையர் கீழ்வல மென்கையு றச்சய னித்திடு மாநூல்சொல்
வாய்மைதி திக்கிறை யாயத னான்முன்வ யங்குக வென்றோதான்
றங்குத லங்களி லம்முறை யேசய னித்தொரு சத்தியரன்
றனக்கெனலோர்த்தவண்வைகுநாரணன்முறைசார்ந்தணி யாயிறைவ
னிங்கரு ளுஞ்சம யந்தனி நோக்கியி ருந்தன னித்தளியி
லிவணிலை சய்யாக் கிருகமெ னத்தன்மு னெய்தல றிந்துமடங்
குங்கன கற்பிய லோர்த்தருள் சிற்பரை கொட்டுக சப்பாணி
கொன்றைநல்வேணியன்மன்றினில்வாழுமைகொட்டுக சப்பாணி.(௮)

தந்தையு மைந்தனு மென்றமு குந்தபி தாமகர் தமிலிகலாத்
தாம்பர மென்றுமு னைத்தா னடிமுடி தாந்துரு வித்தளர்ந்தே
யிந்தணி சேகர னேயிறை யடிமைக ளேதா மெனறெளிந்தாங்
கெய்துபு காட்டின லாலெவர் காண்குந ரெந்தைநி னிணையடியு

* உம்மை—தொக்கது. † செய்களின்வதியாரெனக்கூட்டுக. ¶ வாய்—வாய்மை. "வாயன்மைதெளிந்து" என்பது முதலியவற்றாற்காண்க.

வந்துதெரித்தரு ளென்றுவ ழுத்தவொர் மலரடி காட்டிடமேன்
மற்றது காட்டவ ரங்கிடந் தானெதிர் மாலென வான்றவரோர்க்
குந்தனி மல்லல்செய் தில்லைய மர்ந்தவள் கொட்டுக சப்பாணி
குன்றுறை கந்தனை நன்றருண் முந்தனை கொட்டுக சப்பாணி. (கூ)

பன்னெடு நாளடி யின்னிலை காணிய பாக்கிய மின்றியொராப்
படர்நனி யுற்றன னென்னல னேயொரு பங்கய குஞ்சிதத்தா
ளின்னுழி நேருற வெய்தின முய்திற னிப்பத மேதருமென்
றிருடெறு நூல்சொலு மாதலி னேர்கண் டின்புற வாழ்துமெனு
நன்னிலை யுன்னில னெப்பொழு துங்கிடை நண்ணியொர் நாளுமெழா
னலிதம குணநிலை யிதுவென மூதுவுணர் நற்றவர் புகன்மாலோன்
கொன்னெழி கண்படை கொண்டமர் தில்லைமின் கொட்டுக சப்பாணி
குன்றவி லான்மணி மன்றினி னீள்சுடர் கொட்டுக சப்பாணி. (௰)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப்பருவம்.

இன்னுயிர்களிதயங்கடொறுமிலகுமலமுத்தரிதயத்தினொளிர்முத்தமே
இபமுகமுவிருமுகமனிலகுமுத்திரண்டைமடியினில்வைத்ததனிமுத்தமே
மன்னுருத் திரைகா தசிநிகண் மணிசோம மாமநுவு ளொளிர்முத் தமே
மனுமுதற் பஞ்சாக்க ரந்நாப்ப ணின்றுயிர்கண் மலநீக்கி யருண்முத் தமே
யுன்னுயமு னைசங்க முத்தமே யிமகிரியி னொளிர்வாவி மரைமுத் தமே
யொத்தவினை மலபாக சத்திபதி வாகவிரு ளோடவொளிர் தருமுத் தமே
சென்னிலவு மணிமாட மின்னுதிலை நகர்மேவு சிவகாமி முத்தமருளே
திருவருளினுரியமகளுருவின்வருபரமசிவைதிருவாயின்முத்தமருளே. (க.)

முதன்மறையின்முதலகரநடுமறையினிடையுகரமுடியதர்வமுடியின்மகர
முறைவைத் திலங்குவே தத்திரைய மோங்கார மூலமநு வாக வதனற்
புதவரிய பொருளுருவி னுலகமுய வருமினிய புகர்முகப் பிள்ளை தனையும்
பொருதுமலை பிளவுபட வுததிசுவ றிடவசுரர் போற்றுசூர் †மார்பு ரைப்ப

† மார் புரைப்ப—மார்பு துளைபட.

விதமருவ வருளுகெனு மமரர்துய ரொருவிவிண் ணேறியின் புற்று வாழ
வியன்ஞானசத்தியெனுமிகல்வேலையுய்த்தருளுமிளையசேய்தனையு மடியிற்
பதமிலக வைத்திருக போலமுத் தருள்கென் று பகர்வாயின் முத்த மருளே
பமரமது நுகர்பொழில்கள்சுலவுதிலைநகரிறைவிபவளவாய்முத்தமருளே (௨)

சுரர்களொருபொழுதசுரர்தமையருளினல்வென் றதுணைவலிமறந்த கந்தை
தூண்டநா னென் று முரணவொரி யக்கனுய்த்தோன் றிமா தேவ னங்க
ணிரியுமொருதிருணநட்டிதைவென்மினென் றருளவெறிகாலசைக்கொணு
லினையவெரியுந்தன்வலிமுழுதுநேர்கொண்டுமோரிறையுந்தகித்திலானிந் [ம
திரன்மலர வன்முகுந் தாதியர்த மாயுதத் திறமுய்த்து மாற்ற லிலராய்த்
திகைக்கின்ற சமயத்தி ரங்கிநீர் பரதந்தி ரத்தரே சுதந்தி ரத்தன்
காவில்பசுபதியருளின்வென் றதோர்ந்துய்கெனக்கழறுவாய்முத்தமருளே
கற்பகக் கன்றுதரு சிற்பரத் தொன்றுபிடி கனிவாயின் முத்தமருளே. (௩.)

பரவபர ஞானமா நமதுதிரு முலைகடரு பாலமுது சீவ ராநம்
பாலர்யா வர்க்குமார் பொதுவெனினு நேர்பருகு பருவமுற் றிலரவர்க்காங்
குரியபத மாக்கிமேலினியதமிழ்வேதமெனுமொளிர்சங்கநிறைய வைத்தின்
பூட்டுநம் மிடையின்ப மயனுய மார்ந்துலகி னுவலைமத விருளி ரித்தாங்
கிருமைநலனருள்சைவசித்தாந்தசன்மார்க்கமென்னுமொள்ளொளிவி ரித்தா
ரின்பருளவேகாழிவருஞானசம்பந்தவிரவியெனவமுதவள்ள [மருளே
மருள்கையுற வந்துநே ருண்ணடிசி லென்றுரைசெ யாம்பல்வாய் முத்த
யாவியுயு மாதிலையின் மேவுசிவ காமிமல ரமுதவாய் முத்த மருளே. (௪.)

பொல்லாத சேயரே யாயினுந் தாயரே போற்றினல் லாது வேறு
புகலில்லை யாதலிற் றந்தையர்க டள்ளினும் புடையினின் றினியகூறி
நல்லாறு சென்மாதி ருத்தியவ் வழியுய்த்த னமதுகட னன்றோ வெனு
நயம்புரிதல் சீவர்களின் வினைவழித் தாயராய் நண்ணுநர்க் குறவெண்ணி
வில்லாரு ஞானநெறி செல்லாத சீவநிலை மேவுபல சேயர் பவநோய் [யே
விலகுமா திருவுளமி ரங்கியெம் பெருமவிவர் வினைநீக்கி யருள்க வென்றே
யல்லாரு மொண்மிடற் றண்ணல்பா னின்றுபுக லமுதவாய் முத்த மருளே
யல்லிரியவில்லுதவுதில்லைநகரில்லமலையருள்வாயின்முத்தமருளே. (௫.)

வேறு.

ஈனமில் காரண மாம்பிர மம்மெது யாதினின் றியாம்வந்தோ
மெய்பொரு ளாற்சி விப்புறு கின்றன மெதனிடை நிலைபெறு

மானவி லெப்பொரு டன்னின திட்டிசு மருவுபு சுகதுக்க
வகைசுவை யுற்றமர் கின்றண மெத்தகு மாண்பொருளாம்பிரம
ஞானியர் சார்விய வத்தை நமக்குறு நன்றிவை தேர்ந்துயுமா
நாரணி யோர்த்தரு ளென்றிரு மூவித நாடுவி னாவிடைகண் *
மோனர்க டேறம லர்ந்தசெவ் வாயினின் முத்தம ளித்தருளே
மூதெயில் சூழ்தில மாநகர் வாழ்சிவை முத்தம ளித்தருளே. (சு)

அயனரி யாதிசு ராதிபர் காரண ராமெனி லனையரெலா
மைம்பொறி பூதமு னாயவை யோடள வாதபி றந்தையுளார்
மயலற காரணர் தியாதிரு வர்க்கர்கண் மற்றவ ராதியுயிர்
வகையறி வுளவில வாமிரு வகையப வஞ்சமெ லாமுந்தன்
வயின்வரு காரண சம்புவை யிருதய வானினை யென்னவதர்
வணசிகை சொல்சிவ னேதொழி லைந்தியன் மாநிப * னென்றோர்மின்
முயன்முனி வீரென வேயருள் வாயினின் முத்தம ளித்தருளே.
மோதந டற்கணி யார்தில யிற்சிவை முத்தம ளித்தருளே. (எ)

எப்பொருள் யாதினொ டுங்கிய தோவஃ தேன்றுகொ ளதனிடைநின்
றேவரி னல்லது வேறியை யாதெனல் யாரும றுக்கவொணு
தப்பொருள் யாவையும் வருமுறை யிறுதிதன் னடியினொ டுங்குதலா
லனைத்துமொ டுங்கிய நாளினொ டுக்குந ராருமி லாதெஞ்சு

---

* இருமூவித வினவுக்கு விடைகளென்க. இவ்வாறுவினக்களைப் பிரம வாதிகள் உமாதேவியாரிடத்து வினவ, அவர் விடையருளினரென்று சுவேதாசுவதரோபநிஷதம் விளக்குகின்றது. அவ்வினக்களாவன:

(க) கிம் காரணம் ப்ரஹ்ம–கிம் காரணம் பிரம்ஹ. (உ) குதஸ்ம ஜாதா:–குதஸ்ம ஜாதா: (ங) ஜீவாம கேந–ஜீவாம கேந. (ச) க்வ ச ஸம்ப்ரதிஷ்டா–க்வச சம்பிரதிஷ்டா. (ரு) அதிஷ்டிதா: கேந ஸுகேதரேஷு வர்த்தாமஹே–அதிஷ்டிதா: கேந சுகேதரேஷு வர்த்தாமஹே. (சு) ப்ரஹ்மவிதோ வ்யவஸ்தா–பிரமவிதோ வியவஸ்தா.

இவற்றின்பொருள்: க. காரணமாகிய பிர்மம் யாது? உ. எதினின்று பிறந்தோம்? ங. எதனுல் ஜீவிக்கின்றேம்? ச. எதன்கண்ணே நிலைபேறு? ரு. எதனல் அதிஷ்டிக்கப்பட்டவர்களாய்ச் சுகதுக் கங்களிலிருக்கின்றேம்? சு. (எதனுல்) பிரமவித்தினது வியவஸ்தை? என்பனவாம். * நிபம்–காரணம்

மெய்ப்பொரு ளோர்சிவ னேயவ னிடையினின் மேவுபு நின்றன்னன்
வினைவழி தருமுடல் கொடுவெளி வந்தனிர் மெய்யிது வேயென்று
மூப்பொரு டோர்முனி வர்க்கருள் வாயினின் முத்தம ளித்தருளே
முன்னூறு தில்லையின் மன்னிய மின்னியன் முத்தம ளித்தருளே. (அ)

அளிக்குநர் காக்குந ராதிய வானவ ராற்சீ விப்பெமக்கீண்
டாமெனி லவர்தம சீவன மேதமி னுகவொ ணுதிடருற்
றிளைத்தும யக்கம கந்தைமு னெய்தியெ மீசன ருட்செயலா
லிடரகல் புய்திற நூல்சொலு மாதலின் யாங்கணு நிறைநீல
களத்திறை யாற்சீ விப்புறு கின்றனிர் காசினி வானிரயங்
களினுலை யாநிலை பெறுமி றுப்பவர் கண்ணென வேயருள்வாய்
மூளைத்திம வெற்பமர் பொற்புறு சிற்சுதை முத்தம ளித்தருளே
மோனமெய்ஞ் ஞானிகள் சூழ்தில்லை வாழுமை முத்தம ளித்தருளே, (கூ)

நீவிர கிட்டித ராய்ச்சுக துக்கநி லைச்சுவை துய்த்துறலந்
நிமலன்ம றைப்பினி லாமொரு வறநிலை நிற்றலென் வியவத்தை
சாவுபி.றப்புறு மேனைய வானவர் தம்மினு மக்கிலையாற்
சட்குண நித்திய தற்பர சிற்பொரு டானெரு வோனுமா
தேவளி டத்தென வேதசி ரத்தெளி சித்தாந் தத்துளவாய்த்
திகழ்தருமைந்தொழின் முப்பொருள்களினிலைதெருளுற வருள்வாயான்
மூவர்மு தற்பொரு ளாய்நிறை சிற்பரை முத்தம ளித்தருளே
முற்றுயி ருயவொளிர் பொற்றிலை யமர்சிவை முத்தம ளித்தருளே. (க0)

முத்தப்பருவம் முற்றிற்று

வருகைப் பருவம்.

[கும்
பொற்புறுசெந் நெற்பயிர்கண் மிக்குவிளை நற்கழனி போந்துமூந ரேறுகைக்
போதுவெடி பாய்வாளை மேலெழுபு கன்னல்வண் பூகநீ டெங்கு முன்னும்
பற்பலக டந்து போய் வான்கங்கை நீரிற்ப டிந்தின்ப மார்ந்து வாழ்தல்
பற்றுவிட் டேகியின் புற்றுவாழ் நிலைசெயும் பரமகுரு தீக்கை வாய்ப்புற்
றற்பமெ லச்சேறு முற்றொழிய மேலெழீஇ யரியதத் துவங்க ளோரொன்
றுக்கடந் தேகியா னடிநிழற் பேரின்ப மாமுத்தி யார்தல் காட்டுங்
கற்பனு தீதனமர் தில்லைவாழ் கற்பகக் களிறீன்ற பிடிவ ருகவே
காவலிறை பூவனரி யாதிசுர ரோதுசிவ காமசுந் தரிவ ருகவே. (க)

அச்சுதச் சொற்பொருளி றப்பிலா னென்பதா மாதலா லதுத னக்கே
யாயசிவன் விண்டுவுக் குபசார மாகமுன ளித்தவா நார ணப்பேர்
பொச்சமற வுயிர்முழுது மொத்துநிறைபவனெனும்பொருளதா மாதலாலப்
பொருவில்சிவ நாமமுமுராரிபெறு மாமுன்பு ராரிதா வாய்ந்த தோர்ந்து
மிச்சையால் விண்டுவுக் கேயுரிய தனையபெய ரென்றுசிலர் கூறி னும்ப
லேதுக்க ளானிறுவி மேலுநின் பெயர்காட்டி யெவருமொப் புறவி ளக்கு
நச்சுறுக ளத்தமல நாராய ணன்பன்னி நாராய ணீவ ருகவே
நலமேசெய் தில்லையமர் சிவகாம வல்லியரு ணல்குமங் கணிவ ருகவே. (௨)

தத்துவா தீதபரை போக்குவர வற்றசிவை சச்சிதா னந்த ரூபி
சர்வபரி பூரணியெ னுநிகம சாரசித் தாந்தமெய் தேற்று நீயே
யித் * தராம் பனலானி லாம்பரமு னுகமே லேய்தத்து வங்க டம்மி
லிறங்கியங் கங்குள்ள புவனங்க ளிடைவசித் திடுசமல சீவ ராசி
யொத்தவினைமலபாகசத்திபதிவாயமலமுற்றுரியமுத்திபெறுவா [ன்னைநீ
னுன்னியங் கவரவர்கண் முன்னியல்பின் வந்தருளு முண்மைநின்செயல
நத்திவரு கெனவேண்டு காதலுடை யேமுனரு ணயனநா யகிவ ருகவே
நடநாத ரருணீடு தில்லைமேவு சிவகாமி நாம சுந் தரிவ ருகவே. (௩)

சிருட்டிவினை வாணிபதி யுண்ணின்றி யற்றியருள் செயும்வாணிசத்திவருக
திதிசெய்வினை கமலைபதி புரியவிட ரொழியவருள் செய்திருச் சத்தி வருக
சுருட்டுவினை சீகண்ட ருத்திரற் குடனுய்த்து லக்குமா சத்தி வருக
தூமறைம கேசுரர்பு ரிந்திடமு னின்றுரிமை தோற்றுறும கேசை வருக
வருட்செயல்சதாசிவனினின்றுபுரிமனோன்மனியெமன்னைமுக்கண்ணிவரு
வைஞ்சத்தி யாகியைந் தொழின்முற்று சிற்சத்தி யாயமா தேவி வருக[க
கருட்சிதை வுயிர்க்குதவு தில்லைநக ரில்விலகு கருணைநா யகிவ ருகவே
காசுலவு மாசைபையி லீசனட னேசசிவ காமசுந் தரிவ ருகவே. (௪)

மன்னுயிரின்மலநோய்கள்பார்வையாலறவிமயமலைவளர்மருந்துவருக
வதனமைந்துளகளிறுதனைமருவியைங்கைமதமாவீன்றபிடிமுன்வருக [ருக
பன்னிருகையரியையொருபதுகைபரிதழுவியருள்பாசொளியரிப்பெண்வ
பலகோடி யன்பரொரு வாதுணக் குறையாத படியில்சுவை யமுது வருக
வுன்னரிய பரநாத மூலத்த லத்தொளிரு மொருபெருஞ் சோதி வருக
வோவில்சந்நிதியளவி னுலகியல வசைவின்றி யோம்புமுல கன்னை வருக

---

* தரை அம்பு அனலம் அனிலம் அம்பரம் எனப்பிரிக்க.

கன்னியென வண்டகோ டிகளீன் றுமென் றுநிகழ் கருணைநா யகிவருகவே
கல்விவளர் செல்வநிறை தில்லையமர் செல்விசிவ காமசுந் தரிவருகவே (௫)

வேறு.

அருண கமல முடைந்துநீ ரரணின் றுலர விரித்தொளிர்நின்
னடிபேர்த் திடினூ புரத்தொனிவேட் டயனூர் மராளந் தொடருமதைப்
பிரமன் றொடரு மனைதொடரும் பிதாவுந் தொடருந் தாய்தொடரும்
பிரியா வமரர் முனிவர்முதற் பேணு முலகெ லாந்தொடரும்
வருமித் திறனேர் காண்குநர்நின் மலர்த்தா*ணிபநின் றெழுநாத
மலர்வுற் றகில மாய்விரியும் வகைநேர் காட்டிற் றெனமகிழ்வர்
கருணை பொழியுந் திருநயனி கமல வதனி வருகவே
கவின்கூர் தில்லை யரசிசிவ காமி வருக வருகவே. (௬)

சுருதி நினைச்சச் சிதானந்த சொரூபி யெனுமத் தொகைநிலையே
தூய சத்துச் சித்தின்பாய்ச் சொலுமூ வகையா ரருள் விளக்க
மருவு சகள வடிவின்வெளி வரின்மூ வகையா விகளெளிதின்
வழிபட் டுயுமென் றுளங்கொண்டிம் மகிமா தலங்கட் குயிரெனவாய்
தருமப் பொதுவிற் கோயிலெனச் சாற்றும் பதியிற் சற்சத்தி
தகுசிற் சத்தி யானந்த சத்தி யெனமூன் றுருக்கொண்டு
வருமெப் புவனங் களும்போற்ற வந்த வமலை வருகவே
மன்று விளக்குஞ் சிவகாம வல்லி வருக வருகவே. (௭)

தனையொப் பரிதாய்ச் சிவரூபந் தானாய் விளங்குஞ் சிவகங்கைத்
தடமேற் றிசைவாழ் திருத்தளியிற் சத்து ரூபத் தனிவருக
நினைவிற் கரிதாய்ப் பாதலங்கீழ் நிகழ்பல் புவன மூடுருவி
நேர்நின் றொளிருஞ் சுடர்க்கொழுந்தாய் நிலவுந் திருமூ லட்டான
முனைவற் கிடப்பாற் சித்துருவாய் முன்னின் றமையா ளுமை வருக
முதலைந் தொழிற்றாண் டவமசையா முறைசெய் சொரூப முதல்வன்பால்
வனையற் புதவா னந்தவடி வத்தி னிலங்க மலைவருக
வளங்கூர் தில்லை மணிமன்றின் மயிலே வருக வருகவே. (௮)

உடனாய் நீக்கிச் சிவநியமத் தொழுக்கி யெமையாட் கொளவருக
வுண்மை நூன்மா சறத் தெளிந்தவ் வொழுக்க நிலைநின் றுயவருக

---

* நிபம்—காரணம்.

திடனுர் ஞான குருபாத சேவை புரிந்தின் புறவருக
சிவதீக் காதி சமக்காரத் திறமுற் றுறுமாண் பெறவருக
புடமார் திவிய சிவஞான போதா னுபவந் தரவருக
போற்று மஃது சுவானுபவப் பொருளாய்த் திகழு மாவருக
மடநீத் தருள்கூர் தில்லை நகர் மணியே வருக வருகவே
மணியுள் ளொளியாஞ் சிவகாம வல்லி வருக வருகவே. (கூ)

அகில சீவ மகார்க்கருளா ரமு தூட் டனைய பயை வருக
வன்னுர் பருவத் தளவறிவூட் டமல ஞான மயைவருக
குகவண் டினிய சைவநலங் கொள்ளுங் குழற்பூங் கொடிவருக
குவளைக் களத்தொண் களிறுவகை கூரும் வாமப் பிடிவருக
நிகம சார சித்தாந்த நிலயத் தொளிர்மா மணிவருக
நேய நிறைந்தா ருருணெறியி னிற்பார்க் கருளாங் கனிவருக
நிகையின் முடிவிற் பொதுநீக்கிச் சிறப்பிற் றிகழுஞ் சிவைவருக
தில்லை மணிமன் றொளிர்தருமா தேவி வருகவருகவே. (கய)

வருகைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

● பொன்னிவந் தோங்கற்ப னித்தவள மாமலைப் போந்துளாய் நீயுமிவளும்
பொன்னிவந் தோங்கற்ப னித்தவள மாமலைப் போந்துலகெ லாம்புரக்கு
மன்னிலவென் மருமலர்க் கரத்தாவி யங்குமுத மலரவரு ளிற்றி வானின்
* மன்னிலவென்மருமலர்க்கரத்தாவியங்குமுதமலரவருள்புரியுமிவளும் [ம்
பன்னுமிச்சொற் றொடர்புநோக்கியேகொள்பொருட்பாங்கினொருவாறுநீயு
பழமறையின் முடியுமுணர் வரியபர சிவையையொப் பாயென்ற ழைத்தல்
[பெற்று
யன்னமலி தில்லைநகர் மன்னியொளிர் செல்வியுட னம்புலீ யாடவாவே
யாகமொரு பாதிசிவன் மேவுசிவ காமியுட னம்புலீ யாடவாவே. (க)

காயஞ்ச ரித்திடுவை நீயிவளு மன்பர்வெங் காயஞ்ச ரித்த ருளுவாள்
காமரங் குலடயாவை யண்டகோ டிகளெனுங் காமரங் குடைய ளாவ
டேயம்பு ரிந்துயிர்க டழையவருள் வாயிவள்பகீ றேயம்பு ரிந்த ருளுவாள்
சென்மந்த ரம்பயோ ததிவகிப் பாயடியர் சென்மந்த ரஞ்செய் தருள்வா

● பொன்னி—இலக்குமி * மிகவும் நிலவுகின்ற ஒளியையுடைய மரு மலர் போலுங்கரம்.

டோயம் பரந்தழுடி மீமகிழ்வை யிவளிடர் தோயம்ப ரற்குண் மகிழ்வா
மோநந் தங்கிவடி வானருளின் வாழ்வைநீ தூமனந் தங்கி வாழ்வா
னாயம் பலத்தாசி தனைநிகர்தி நீயிவளொ டம்புலீ யாடவாவே
யாவியுய வேதிலையின் மேவுசிவ காமியுட னம்புலீ யாடவாவே. (௨)

திருமறைசி வாகமமு ஞயசிவ நூல்கள்பல தெளியவோர்ந் தன்பிஞெங்கு
சிலரா கிச்சமய சேடநிரு வாணசிவ தீக்கையபி டேக முதலா
வருசமற் காரமுறை பெற்றுரிய சரியாதி வாய்ந்துசங் மார்க்க மேவி
மன்னுமூவாயிரவர்திருவுடையவந்தணர்கள்மகுடாகமஞ்சொன்முறையே
யுரகமன் சிற்சபா பூசனைவி தானமென வுய்த்தவிதி பேணி யாற்றி
யொருவா தனுக்கரா யுறவுமா வுண்டிமிழு முனையழைத் திடவெஞெற்ரு
யரவுதுதி தில்லைநக ருண்மலரும் வல்லியுட னம்புலீ யாட வாவே
யம்பலவ னேயமிகு மம்பைசிவ காமியுட னம்புலீ யாட வாவே. (௩)

தேவார மீசவாக் கெனுமுண்மை யுள்ளவா தேர்ந்துலகு பேணியுய்வான்
தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியனென் சீருரைதி யாக ராச
ஞெவாத திருவருட் டென்மறையு ளுயிராக வோதிவைத் தருளு மனுவி
னுரியபெ ருடாங்களே யாகவாழ் கின்றதிரு வுடையவந் தணர்க ளென்னு
மூவாயி ரம்புனி சுரர்திருச் சந்நிதியின் முன்னமோர்ந் துரிய பணிகண்
முற்றுமினி தாற்றிநேர் நிற்கின்ற தோராமன் முழ்காத்தன் மதியன் றுனக்
காவாவிப் பேறுகிட் டரியதெம் மன்னையுட னம்புலீ யாட வாவே
யரியமறை யோதுதிலை நகரிசிவ காமியுட னம்புலீ யாட வாவே. (௪)

[ஞய்பின்
மூன்றுநாண் மகவெனத் தோன்றுநா ளும்புருவ முன்னுடைந் தொடங்கி
முற்றுமெட்டாந்தினமுநன்னுதலினின்னுவமைமுற்றுமெட்டாதுலைந்தா
யேன்றகலை பூர்த்திபெறு நாளுமிவ டிருமுகத் தெழிலினுக் கனுவு நேரா
யின்னகுறையென்றுமுளையாதலான்மண்ணுரு தேகியந் தாத்தி னென்று
மூன்றுமொருநிலைபெற்றிருக்கொணுதலைகிற்றியுன்னியல்புநன்றுதேர்ந்து
முனையாடவாவென்றழைக்கும்பெருங்கருணையுனின்வலியவாய்த்ததோர்தி
யான்றவர்சொறில்லையொளிசான்றமயில்வெல்லியலொடம்புலீயாடவாவே
யம்புலியு மன்பணியு முன்பணியு மம்பிகையொ டம்புலீ யாட வாவே. (௫)

சடவானினிலையின்றியோடியுலகிற்றியொருதன்மையினுருமவென்றுஞ்
சடிதியிற்றேய்ந்துதேய்ந்தொருதினம்பானுவுட்சார்ந்துருவமாய்ந்துசிசவி

லுடல்கூனி நரைமேவியொளிகுறைந் தின்னனபலூன முற்றலையுமுனையு
முலகெலாம்வருமுறையொடுங்குநாளவைபோலொடுங்கிலா தோர்படித்
நடநாத னைந்தொழிற் றாண்டவத் திடனாகி ஞானமய மாயிலங்கு [தாய்
நபமீது போக்குவர வற்றுநிறை பூரணி நயந்தழைக் கும்பே றனைக்
கடைவாங் தரத்தன் றயர்த்திடி னிழிந்துலைவை யம்புலீ யாட வாவே
யாடகமன் மன்றினொளி நீடுதிலை யம்பையுட னம்புலீ யாட வாவே. (௬)

இச்சைஞானங்கிரியையென்னுமுத்தொகையுற்றிலங்குமுச்சத்திதா னென்
[மிலகும்
றேத்துசிவநூல்வாய்மைவகைமையின் விளக்குவாணிப்பொதுவினென்று
விச்சைமூவுருவினுஞ்செங்கைசெங்கழுநீரின் விரைமலர்கள்கொண்டுதானே
மேவுசீவர்க்கெலா நன்னெறி யுணர்த்திமேல் வீடுமுய்த் தருள்கு ருவெனா
நச்சியுல குய்யநின் றருள்கின்ற வம்மனைமு னண்ணுவா யெனினி னக்கு
நலந்தெரித் துன்பாத கந்தொலைத் தொருவாத ஞானவீ டுறவ ளிக்கு
மச்சமற வாழ்வைநீ யுய்யுமதி யேலிவளொ டம்புலீ யாட வாவே
யாமன்விழை வாமிதிலை நாமசிவ காமியு டனம்புலீ யாட வாவே. (௭)

நீதிவழு வாதவா சாதலுக் கேதநோய் நிலையினு ஒருக னல்லே
னீடுதவ மாற்றியொரு வீடுபெறு மார்க்கமதை நேயமிகு தூய குரவர்
பாதவழி பாடுபுரி யாவுறுது மென்றுவரு பங்கமகல் சிங்க வன்மன்
பரவுசிவ கங்கைமூழ் கியவளவி லேயனைய பங்கமுழு துந்தொ லைத்து
மாதகிர ணியவரும னுக்கிவேந் தாய்முடி வகித்தியற் றுரிமை நல்கி [த்தா
மன்னுதன் றளிபொன்னி யற்றுபணி யாதிகொடு வாய்மையின் பழும ளி
ளாதலா னின்களங் காதிதீர்த் தின்பருள்வளம்புலீ யாட வாவே
யாடகச பேசனிட மேவுசிவ காமியுட னம்புலீ யாட வாவே. (௮)

[லுணர்வோர்
குருத்துவம்வி ளக்குசெங் கழுநீர்கை மலர்மிசைக் கொண்டதும லாம
குறைமதியரேனும்பன்முறைமெல்லமெல்லவுட்கொள்ளுமாநனிவிளக்கித்
திருத்தியுறு பக்குவஞ் செய்தின்ப வெள்ளங் கிளைத்துவாழ் வுற்றி ருப்பச்
[டுறுதிறத்தும்
செய்கருணை பன்முறைசொல் விப்பவுரை பைங்கிள்ளை செங்கைகொண்
விருத்திதரு சிவகங்கை தன்முனங் திகழமேல் வீற்றிருந் தருடிறத்தும்
விளக்குகின் றனள் குறையுமதியம்பாமென் றஞ்சன்மேவினீநன் குணர்த்தி
யருத்திபெற் றுயல்செயுந் தில்லையருள் வல்லியுட னம்புலீ யாட வாவே
யானந்த தாண்டவனு ளார்கின்ற பூந்தொடியொ டம்புலீ யாட வாவே. (௯)

[நீட்டி
வேண்டுநர்கள் வேண்டியாங் கள்ளிக்கொ டுக்கின்ற விரைமலர்ச் செங்கை
விளிப்பவாராமையொன்றோசகசுளத்தியுடன்வேணியமர்கிற்றிகருணை[ண்
பூண்டநாயகிமுனிவுருளெனினுமுன்புதேய்பொருவில்வீரன்பொருண்மு
போலன்றியுயிர்தெறும்பாங்குபணிபணியுமேற்போந்துண்டுமிழ்ந்திடாதா
னீண்டகர முகமைந்தர் சந்திரா பூபமென நினையெடுத் துண்ப ரின்னு
நேர்கின்ற வின்னல்பல வோர்கின்ற நன்னர்மதி நிலவுமதி யாகி னம்மை
யாண்டருள்செய் தில்லையமர் காண்டகைய வல்லியுட னம்புலீ யாட வாவே
யாமலரு மேமசடி வாமிசிவ காமியுட னம்புலீ யாட வாவே. (கo)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

அம்மானைப்பருவம்.

பலவகையவண்டங்கள்பூதாதிதத்துவப்பகுப்பொன்றிஞென்றுமேன்மேற்
பத்துநூ ருயிரம னயுதநியு தங்களாப் பல்குநிரை யாவு நேரே
யுலகரெவருங்காணுமாகாட்டுகின்றவ ளொமுலகன்னையெனவியப்ப[ற்செய்
வொண்பொன்வயி ரஞ்செய்யமணிகள்கோமேதமொள்ளொளிநீலமாதியா
திலகுபல வம்மனைக ணிரைநிரைய வாகிமே லெட்டிநோக் குநர்கண் மீளா
தெய்ப்பமேற்சென் றுமீண்டுன் கையுறனின் கணுலகெய்திலயமாதல்காட்டு
மலகில்வளநிறைதில்லைநகரில்வருமொருசெல்வியம்மானையாடியருளே
யருணீடு நடராச ரிடமேவு சிவகாமி யம்மானை யாடியருளே. (க)

மாற்றுயர்ந்தொளிர்பொன்னினுற்றுமம்மனைசெங்கைமலர்நின் றெழுந்து
மற்றதன்பின்னர்நீலத்தினுற்செய்தவம்மானைசெலவன்ன தன்பின்[செல்ல
ரேற்றுபடிகத்தினுற்றியசென்றுசென்றமுறைதூயகமலக்காத்திற் [ங்க
ரேய்பொடுங்குதல்பிரமன்விண்டுருத்திருனது தூயொளியின் வந்தொடு
வேற்றுனையொடுக்குநர்கண்மேலொருவரின்றிநீயேதுரியமூர்த்தியாய்நின்
றிலங்கும்ப ரத்துவம்வி ளக்குமதின் மேற்சிகரி யிம்பர்வீ ழாது வானை
யாற்றிநின் றிடல்காட்டு தில்லைநக ரன்னைநீ யம்மானை யாடி யருளே
யாரணமு மாகமமு மோதுசிவ காமிமணி யம்மானை யாடி யருளே. (உ)

கள்ளவன சத்திலகு பிள்ளையோ திமமெழுபு ககனமேற் சேற லேய்ப்பக்
கைக்கமல முற்றொளிசெய் நித்திலவம் மானைமேற் கடிதுசெல வாக்குநரவ
வெள்ளமினவண்டுகளிகொள்ளநனியுண்டுவிரைமென்மலர்க்காந்தணின்று
மேலெழுதல் போலவரு நீலமணி யாலொளிவி ளக்குமம் மானை யமுத
வள்ளநிகழ் காழிமணி தெள்ளுதமிழ் வாழமகி மலர்வாயி னூட்டு செங்கை
மலர்நின்றுமேற்செல்லமலர்வீதியிருபால்வயங்குமணிமாடமெங்கு [ருளே
மள்ளொளிசெய்தில்லையருள்வெள்ளநிறை † வள்ளிசிவைபம்மானையாடிய
யண்ணலின் புறவாம நண்ணிமன் சிவகாமி யம்மானை யாடி யருளே. (ரு)

வயிரமணி யாலியற் றியபலவும் வண்டாள மாமணியி னலி யற்றம்
மானைபல வுங்கமல மலர்வாட்டி மிளிர்செங்கை மலர்நீட்டி மேல்வி டுத்த
லியலுருவம்வியலருவமுயலருவவுருவங்களெவையுங்கடந்தொர்விண்ணே
யெழின்மேனியாக்கொண்டுதொழுமாபன்மார்க்கர்களுமெங்கணுநிறைந்து
யுபவருணிஞயகற்கமுதகவள்ங்கள்பலவொண்கைமலர்நீட்டியூட்டி [நின்றே
யுழவுலன்பினர்செய்சபரியைமுறைவிளக்குதலையொக்குமாலிக்கும் வெட்
யல்லலுறுசொல்லிநிறைதில்லையருள்வல்லியுமையம்மானையாடியருளே [இ
யம்மைநலன் மெய்ம்மைநல னிம்மையரு ளம்மைமணி யம்மானை யாடி
[யருளே. (சு)

வேதாகன் கேயவைக ளோது மார்க் கம்பலவி ளங்கலினவ் வேத முடியாய்
விளம்புவேதாந்தமும்பற்பலவகைப்படவிரிந்தொன்றையொன்றுதழுவா
தேதமார் சீவர்பக் குவநோக்கி யவரவர்க் கிசையவோ ரொன்ற ணிப்பித் *
திதமாக வவ்வளவி னீர்த்துமே லேற்றிமெய் யின்புபின் னன்பி னருள்வா
ஞதனேவைத்தனனவ்வகைகளென்றுண்மைநூனன்மையோர்ந்தவைகட
நண்ணுசோபானமாத்தழுவுசித்தாந்தமேநவையில்பேரின்புதருமென் [ன்கீழ்
¶ ஞுதமார் சைவர்புகல் சீதமார் தில்லையா சம்மானை யாடி யருளே
யன்பர்பலர்முன்பரவுபொன்பெய்சபையின்பசிவையம்மானையாடியருளே.

ஓதுசு வேதா சுவதர சைவமெய் யொளிதிகழ் வேதாந்தத்
துண்மைம றைத்துநி ராலம் பாதிய வோதுப சாரநிலை

---

† வள்ளி—கொடையுடையாள். * அண்ணிப்பித்தல்—இனிப்பித்தல்.
அது, "அண்ணிக்குந்தீங்கரும்பை" "கருப்புத்தூரினுமண்ணிக்கும்."
"ஆகமமாகிநின்றண்ணிப்பான்." என்ற தேவாரதிருவாசகங்களாற் காண்க.
¶ ஆதம்—விருப்பம். அது, "ஆதமிலிநாயேனை" யென்பதாதியாற்
காண்க.

வேதமு டிப்பொருண் மெய்யென வோதுநர் வேதனை யாற்றமே
வீண்டுற வுறுமக பதிநிலை நோக்குபு விண்குரு வோதுமத
பாதக நூலுமெய் யென்பர்கொல் வீயுடல் பாய்பொறி யாதிகளே
பரமெனு மவரணி மையினுற வவையல பரமுயி ரெனன்முகம
ஞதலை யுய்த்துணர் கென்றரு ளம்பிகை யாடுக வம்மனையே
யங்கணர் பங்கமர் மங்களை யங்கணி யாடுக வம்மனையே. (கூ)

யாங்கள் செய்தக்கன வல்லன வோர்த்தருள் கென்றரு டந்தைபத
மிறைஞ்சிவி ஞவிய நன்குண சூானை யேயிமை யோர்க்குமுழுத்
தீங்குசெய் வன்குண ஞக்குமு பாயமி தேயென நீபிரமந்
தீமைகள் யாவுமி யற்றத ஞலொரு தீவினை யேதமுநின்
பாங்குமு ருபர முயிர்செக நாகுபொய் பண்ணவர் நின்பகைஞர்
படர்புரி கெனவசு ராசிரி யன்புகல் பவைசம யோசிதமா
வாங்குரை நெறிபவ நெறியென வோர்ப்பவ ளாடுக வம்மனையே
* யண்டர்கடொண்டர்கள்பின்செல்பொனம்பலையாடுகவம்மனையே. (எ)

அர்ச்சுந ராமர்கள் போர்நிலை பார்நிலை யாற்றலொன் றேகுறித்தவ்
வமயமு ரைத்தது முகமனெ னப்படு மன்றிமெய் யன்றதனை
யிச்சைமி குத்தா னர்ச்சனை யாற்றிம னிவனிறை யாமடிமை
யென்றுமெய் யோர்த்திடு கண்ணரு மண்ணர சிடர்தரு மெனவிட்டே
யெச்சமி லின்பருள் வதுமுது தவமென வேமொாள் வசிட்டருநா
மேபர மென்பதொ ழித்தடி மைத்திற னெய்திமெய் யன்பினரா
யச்செய னிற்றலி னோர்கென வருள்பவ ளாடுக வம்மனையே
யாயிர மூவர்கள் வாழ்பதி மேவனை யாடுக வம்மனையே. (அ)

தாருவி னேர்கிளை காட்டுபு மேற்பிறை தான்காட் டிறுசாகா
சந்திர தூலா ருந்ததி நோக்கிடு தன்மையின் முன்னெளிதாய்ந்
தோருக பின்புமெய் யென்றுசொன் ஞாயம தொத்திட வொண்பாகே
ருணர்வரு மந்தர்க ளுயிர்பர மென்றுமு ஞேர்ந்தஃ தூனமுற
றேருபு பின்பழு தில்பிர மந்தனி தெளியவு ரைத்தமறைச்
சிரங்கணி ராலம் பாதிய வென்றுமெய் தேற்றுறு சித்தாந்த
வாரமு தூட்டிவ ளர்த்தரு ளுலகனை யாடுக வம்மனையே
யம்புலி யூரம ரும்பர ஞயகி யாடுக வம்மனையே. (கூ)

* அண்டர்—எழுவாய்.

சீவர்களைப்பர மென்றுசில் வேதசி ரங்களு ரைக்குமது
செப்புகி ழங்கெழு தாமரை யினையது சேணெழ வாதரவாய்
மேவிய சேற்றினில் வந்ததெ னும்பொருள் விரவுபங் கயமென்னு
விளம்பலின் யாங்கணு நிறைபரன் மலரடி மிசையன சீவர்களை
யோவற வாற்றிடு மொப்புமை யாலென வோரா தகந்தைநிலை
யுற்றொரு நாம்பர மென்பவ ராழ்நரகுற் றொருவா ரென்றே
யாவது ரைத்தரு டில்லைந கர்ச்சிவை யாடுக வம்மனையே
யந்தரி சுந்தரி நந்திரி யம்பகி யாடுக வம்மனையே. (௧0)

அம்மானைப்பருவம்முற்றிற்று.

நீராடற்பருவம்.

மூவகைய சீவர்களி னறிவுசெய லுகர்வுநீ முன்னறிந் தாற்றி யுண்டான்
முற்றுமென நுகருமா நுகரெனுஞ் சுருதிமுதன் மொழிதலா லனைய சீவர்
தேவர்முனிவோர்முதலயாவரும்போற்றுநின் றிருவிழாச்சேவைமுறையே
செய்திவிய தெரிசனப் பேறுபெறு வான்றச தினத்தின்ப வாரி தோய்ந்தங்
கோவிலரு ளாலென்றும் வாழ்கவெனவேதிருவுளங்கொண்ட நீயுமுன்ன
ருண்மையா னந்தவா ரிதிதோய்ந் துனாற்றுதலையுலகநேர் காணவென்றுஞ்
சீவனி றைந்துநிலை மேவுசிவ கங்கையரு டிகழுநீ ராடி யருளே
சிவனுருவின்மருவுசிவைசிவனுருவமெனுமனையசிவகங்கையாடியருளே.(௧

பகைவனைத் தெறுமுபா யம்பகா விருளிற் படர்ந்திற் புகுந்த குருவைப்
பகையென்று பாசமுய்த் துயிர்கொன்ற பாதகப் பயன்வந் துடற்றமேனு
மிகல்வலிக் கடியொன்று கரமடித் துணைகண்ட மியையப் பிணித்தி றுக்கி
யிருங்கடலின் வீழ்த்தநொந்தினைநின் றவருணற்கிரக்கமிகுபொற்சபேசன்
றகையுமப் பாசத்தை நீக்கியாங் கனையனைச் சார்பாத கந்தொ லைத்துத் [லாங்
தண்ணருள்செய்தற்கிடமதாய்நின்ற வண்கடற் றண்டுறையி தென்றுலகெ
தொகுமனைய பாசமத றுத்ததுறை மேவியத் தூயநீ ராடி யருளே
சுத்தசத் துவமேவு பத்தர்கட் கருடேவி தூயநீ ராடி யருளே. (௨)

கருமமே பிரமமென மேற்கொண்டு பதடியிற் கழிதவம் பூண்டுநின்ற
கன்மடர்க ளாறெணா யிரவரைப் பன்னெடுங் காலஞ்சு மந்த வதனால்
வருபெருந்தோடத்தினாற்கொலொருசிறுவரைவகிக்கொணாதாழ்ந்ததாரு
வனமுதலபதியெலாம்வந்துவந்திறைஞ்சவம்மாநடனமறைசொல்சிவனே

யருள்பிரம நாமடிமை யென்றசித் தாந்தசை வாதியர்க ளரவு புலிமு
வாயிரவ ராதியரை யேசுமந் தனவாத மலைவறவ கித்துநின்றே
மருவுநல நிறைதனிடை நிலைகொடிலை நிலவுபுலி மடுவினீ ராடியருளே
வள்ளமுது புகலிமணி சொள்ளவரு ளிறைவிபுலி மடுவினீ ராடி யருளே

மகவாகி வந்தபொழு தேதாதை தனைவினவி வந்துநீ ராடி யோதி
மலர்மூல நாதர்திரு வடிபேணு ரூமுனன் மார்த்தபூ சனைசெய் தாற்ற
னிகமாகமஞ்சொன்முறையெனநாடி மேற்றிசையினிறுவியோரிலிங்கமத
நித்தியாதியபூசைமுக்கியாங்கம்மெனநிகழ்த்துநீர்நிறைதண்வாவி [னேர்
யிகபோகபரபோகமூழ்குநர்க்கினிதருளுமியல்பதாவொன்றுதொட்டாங்
கியல்பூச ஞதிதின மிகவாதி யற்றிவீற் றிருந்திரணி யனைமு னோர்க் * கந்
திகமாக வுய்யுநெறி தருவியாக் கிரபாத தீர்த்தநீ ராடியருளே
செல்லரியபல்லுயிருய்வொல்லைதருதில்லையுமைதிவியநீராடியருளே. (௪)

தாருவன மாநடன நேர்கண்ட வானந்த சலதிதோய் மால்சொ லாலத்
தண்கயிலை நோற்றரன ,தருள்வழியி னுற்பதஞ் சலிவடிவ னீண்டு வந்து
மேருவன மாமலைக் கொழுந்தா யெழுந்தொளி விளங்குதிரு மூல நாத
விமலபூசனைபுரீஇயான்மார்த்தசிவலிங்கமேற்றிசையினிறுவியதனேர்
கூருவன மார்வாவி யொன்றுதொட் டன்னநீர் கொண்டுபூ சித்த மர்ந்து
குளிர்நடங்கண்டுலகெலாமுய்யவென்றுமிதுகுயிற்றியருளுகவிங்கெனுத்
தேருவன பல்வரம் விழைந்துகொ ளனந்தன்மா தீர்த்தநீ ராடி யருளே
தில்லைவன மேவியருள் செல்விசிவ காமிசிவ தீர்த்தநீ ராடி யருளே. (௫)

வேறு

வண்டு படிசெவ் வனசஞ்சை வலநீ லங்கு முதம்பவளம்
வளைநித் திலமம் புயமுகுள மடித்து வருவண் டிரைசுழிகண்
மண்டு பமர வொழுங்கலவன் வரால்கள் கமட முதலாடல்
வாரா விருந்தாய் நினதங்க வகையா யுறுதம் மினங்கள்வரக்
கண்டு மகிழ்ச்சி கொண்டாடுங் கவினீ தெனவண் கவிஞர்சொலக்
கருணைமுகமு னவயவநற் காட்சி நோக்கி யெளி ‡ துய்யத்
தொண்டர் நாத சேரிநிறை தூநீ ராடி யருளுகவே
தொல்லை யகற்றுந் தில்லையுமை தூநீ ராடி யருளுகவே. (௬)

---

* அந்திகம்—சமீபம்.   ‡ தொண்டர் உய்ய என்க.

மறையா கமமா தியினுண்மை வயக்கு சாமு சித்தநிலை
மணியாய் மூவா யிரத்திலங்கோர் மணியைப் பகலிற் குருடாதி
நிறைமா மனுவி னீர்த்தருட்கை நின்றூங் கொழுகா ரமுதுதவி
நீகொற் றவன்வாழ் குடியமர்தி நேர்பக் குவர்க்காங் கருளியெனுந்
தறைவான் பரவு மறைஞான சம்பந்தாசா ரியசைவத்
தனிமா மணிவீற் றிருந்தருளுந் தகுசீர்த் திருக்க ளாஞ்சேரித்
துறையார் பிரம தீர்த்தநிறை தூநீ ராடி யருளுகவே
துகடீர்த் தருள்சீர்த் தில்லையுமை தூநீ ராடி யருளுகவே. (௭)

கருத்து விருத்த மாதல்சக ளத்தி யிடையோர் விலர்செயலே
கற்பன் றெனவோர்த் தணிமையினங் காதன் மருகி களுங்கலந்து
விருத்த மறவாழ் கின்றனர்நாம் விரிநீர்த் தேவி யதிசெய்த்தாய்
வியோம கேசாக் கிரத்திருப்ப விமலன் வாமத் தணித்திருத்தல்
பொருத்த மலவீண் டவளுடனுய்ப் புரிந்து கலந்து திளைத்துமெனப்
போந்து தோய்ந்து மகிழ்தியெனப் புலவ ருன்சீ ரெடுத்துரைப்பத்
திருத்த முறுதண் சிவப்பிரியைத் தெண்ணீ ராடி யருளுகவே
தில்லை நகர்வாழ் செல்விசிவை தெண்ணீ ராடி யருளுகவே. (௮)

பித்தி லிகித பிரணவத்தும்¶ பிரிவி லருணைக் காலு ருவாய்ப்
பிறங்கி யருளும் பெருவயிற்றுப் பிள்ளை தனக்கு மூட்டாத
துத்த வுததி தனையனைய சுமுக மகவி னதிப் பிரியத்
தூய மகவென் றேவருளாஞ் சுத்தோ ததியா யுறவளித்தாய்
பத்தி தருமவ் வுபமனிய பகவ னுகர்பண் பாலுனக்கும்
பற்று மிகுஞ்செந் நாப்புலவர் பகர்தென் சுருதி யும்விளக்கு
சித்தி தரலோர்ந் துலகுய்யத் திருப்பாற் கடனீ ராடுகவே
தில்லை நகர்வாழ் மாதேவி தெண்ணீராடி யருளுகவே. (௯)

சீவ ரொருபான் றிசையினராய்த் திகழ்தலாலோ வீரைந்து
திறத்திந் திரியா திகளைவெலுந் திறமூழ் குநர்க்காங் கருளுத
மேவ விளக்கி யுய்த்திடற்கோ விழைந்து படியு[illegible]ன்பினர்க்கு
விரவுகுணம் பத்தளித்தவரை விமல பத்த ராக் கிடற்கோ

¶ உம்—உங்களுடைய

வோவி லருள்கூர் தில்லையிடத் தொருபான் றீர்த்த மமைத்தனையா
லூதக மவற்று ணின்வடிவா யொளிரும் பரமா நந்தவருட்
கூவ மிதனி லுலகுயுமா குளிர்நீ ராடி யருளுகவே
குலவு வளங்கூர் தில்லையுமை குளிர்நீ ராடி யருளுகவே. (௧௦)

பொன்னூசற்பருவம்.

பலகோடி யண்டபுவ னங்களின்வ சிக்கின்ற பந்தமல சீவ ராசிப்
பகுதிகளை யெண்பத்து நான்குநூ றாயிரம் பகபேத நாற்றோற் றமேழ்
நிலையாக வருகின்ற நிலையற்ற வுடலமென நிகழூச லிடைவைத் துமே
னிகளமா மிருவினைக் கயிறூர்த்து மேலுமது நீடுதொடர் பற்ற போதே
யுலையூசல் கயிறுதா னற்றிடற் றுய்தமையெ னூரியமெய் கண்ட சுருதி
யுண்மையுல குணரவே வண்மை மலரடியின்க ணுய்யுமா தாங்கி யருளும்
புலவோர்கள்பணிதில்லைநகர்வாழுமொருசெல்விபொன்னூசலாடியருளே
பொற்சடிலர் சிற்சபையி னிச்சமொளிர் பச்சைமயில் பொன்னூச லாடி
[யருளே ௧,

ஆற்றுதவ மென்மைவன் மையைநோக்கி யவரவரை யரியயன் முகுந்தனுதி
யமரேச ராய்வீற் றிருப்பவாங் காங்குநீ யாணைதந் துய்க்கு முறையுஞ்
சாற்றுமிப் பதவியெம் மன்னைசிவ காமசுந் தரிதருங் கருணை வலியாற்
சார்தரப் பெற்றுளே மாதலா லனையசிவை தாண்மலர் வழாம லென்றுந்
தேற்றிவழிபடினன்றிநிலைபெறுமெனும்வாய்மைசேருமதிகாரமல * மாய்
செருக்கால் மறந்துநா மேபிரம மெனமாறு செய்யினப் பதவி மாற்றிப்
போற்றருளி னற்கீழி ழிச்சமுறை யுங்காட்டு பொன்னூச லாடி யருளே
பொன்னம்பலத்தமருமின்னனங்கயற்கணுமைபொன்னூசலாடியருளே. ௨.

பற்பலசு ரர்க்கிறைமை யப்புவன வாசிகள் படிந்தவரை முதல்வ ராக்கொள்
பாங்கினின் றுய்யவுப சாரமா வுரைபொதுப் பழமறைக ணான்கு காலாய்
நிற்பவா றங்கங்கள் சூழ்சட்ட மாமுகம ணிகழ்த்தெனைய வேதாந் தமா
நிகரநாப் பட்பரப் பாகமே லுண்மையாய் நிலசைவ வேதாந் தமே
விற்பாவு பீடமாய்த் திகழவத் தெளிவென் று மேலையோ ரோதுவாய்மை
விளக்குசித் தாந்தமே யளக்கிலா னந்தமலர் மெல்லணைய தாக வதன்மேற்
பொற்புறவிருந்தருளியெம்மையாளம்மையேபொன்னூசலாடியருளே
பொதுவமலர்சததமகிழ்ததியுறவுதவுமனைபொன்னூசலாடியருளே ௩.

---

* மாய் — வினைத்தொகை.

தாயர்பலர் மேயகரு வாயொருப தாயமதி தாங்கிநொந் துளைந்து யோனி
தன்வழிப் பெறவந்து பன்னியர்க ளைப்புணர்பு சாம்பகுச லவர்க ளாதி
சேயர்களை யவ்வழிப் பெற்றமா லாதிபல தேவரிற்பி றப்பி லாமா
தேவருனை வாமபா கத்தென்றும் வைத்துமத் தேவர்கா மாதி நீக்கி
தூயகா மாரியாய்ப் பிரணவ புலிங்கமேற் றோற்றுவித் தருளு நுங்கள்
சுமுகசண்முகர்கடமையுலகர்சந்ததியாதிசுகவாழ்வுபெற்றுவினைகள் [ளே
போயகன்றுய்யவொளிர்தொட்டில்வைத்தாட்டுமயில்பொன்னூசலாடியரு
பொற்சபையி லற்புதைபொன் வெற்புதவு சிற்புதல்வி பொன்னூச லாடி
[யருளே. ௪.

சிறையளிக ணறைபருகி யறையினிசை நிறைதருஞ் சேண்செல்கா விரிநீ
தெய்வகாவிரியணியதுய்யவாவித்தடத் தினிநீடுசெயலைமேவி [ழல்வாய்
நிறைசெயலை யந்தாரு வினையரிது தைந்தாடு நேமத் தாரு முகுள
நிகரங்கள் விகசித்து நிலமெங்கும் வருடிக்கு நிலையம்பொ னூபு ரச்செம்
மறையொலிசெயுன துபதபரிசமெவ ரிடையுறினு மற்றவரு ளச்சி மிழ்ப்பு
மாறிமலர் வுற்றுலகின் ஞானம்வரு டித்தலை வயக்குமா லுலக மெல்லாம்
பொறையுயிர்த்தருளன்னைமலையளித்திடுமுன்னைபொன்னூசலாடியருளே
புலியொடரவுலகமுயுநிலமைதருதிலையிறைவிபொன்னூசலாடியருளே. ௫.

மலரயன்முராரிமுதல்வானவர்கண்மானவர்கண்மாமுனிவராதியோர்க்கு
மாண்குருத் துவம்வாய்ப்ப தெவன்றியா னத்தனைய மாதேவ பரம குருவி
னிலகருட் சத்திநீ யெனல்கரச் செங்குவளை யினின்விளக் குபுபன்முறைய
மினிதுணர்த்தருள்கிள்ளையுறுகரத் திலகவைத்தெவையுநீசெய்துகாட்டி[ரு
னலதுயிர்செயாவென்றுசெபவடமதோர்செங்கையலர்வைத்தநெறியினின்
ரடிநிழலில்வாழ்வரெனவொருகைகீழ் நீட்டியோர்த் தருளிறைவி யுண்மை
[யோர்ந்த
புலவர்புகழ்தருதில்லைநகரில்வருமொருசெல்விபொன்னூசலாடியருளே
பொங்குவிடமுண்டபரனன்குசுவைகண்டகழைபொன்னூசலாடியருளே.

மந்ததரர் மந்தர்தீ விரர்கடீ விரதரரென் வகையசீ வர்க்கு ணர்த்தல்
வருசரியை யாளர்கிரி யாயோகர் ஞானநிலை வாய்மையர்க் குணர்த்து மரபு
மூன்றுறக் கேட்டல்சிந் தித்தறெளி வேநிட்டை முறையுய வயக்கு மாண்பு
முதியசா லோகசா மீபசா ரூபசா யுச்சிய மளிக்கு முறைமை

யிந்தநால் வகைகணீ யேயருளல் காட்டியாங் கியம்பியருள் கிள்ளை கழுநீ
ரினியசெபவடநீட்சிகொண்டொற்செங்கைமலரிலகுசிவகாமியனையே
புந்திமகிழ் செல்வர்களு வந்துபணி தில்லையுமை பொன்னூசலாடியருளே
புறறாவ சைத்தவரா னுக்கிடனி லுற்றமயில் பொன்னூசலாடி யருளே. எ.

எவரேனு மூழ்குநர்கள் பவவாரி மூழ்காதெ டுத்தின்ப வாரி தோய்வித்
தின்னருள்செய்சிவகங்கைசந்நிதியிலுறலங்கணெய்துநர்க்கருள்வெள்ளநீ
தவறாது நாற்கரத் தள்ளிக்கொ டுக்கின்ற தயைவாய்மை காட்ட வதன்மேற்
றளிவீற்றி ருந்தருளி நடமூல நாதர்பாற் றண்மலர்க் கரமி ரண்டே
திவள்வாக வுடனுறைத லவர்பாதி கொளுமுறைமை தேற்றநீவீற்றிருந்தும்
திகழ்குருத்துவமெலடிநிழல்புகுத்துதல்காட்டுசெங்கையேநான்குமுதவப்
புவனேசர் தொழுதில்லை நகர்மேவி யருள்வல்லி பொன்னூச லாடியருளே
புத்தர்மதமத்தொழியவித்தகரையுய்த்தமயில்பொன்னூசலாடியருளே. அ.

முற்புரிதவத்தினலிப்பிறவிவாய்த்ததுமுகுந்தன்முதலோர்க்கும்வேட்கை
முதிருமிப் புவனிமா னுடயாக்கை பெற்றநா முத்திக்கு ழைப்ப தன்றி
யற்பபலனுய்த்தொழியும்மற்றைநெறியிற்புகுதலவமாகுமென்றொழித்தே
யருணெறிச் சைவசித் தாந்தசன் மார்க்கமே யகிலமும ளிக்கு மென்னச்
சொற்பரசிவாகமத்துண்மையோர்ந்தத்திருத்தொண்டையேபேணியாற்றுந்
தூயர்போல் வராதி சிறுமைக்கு ழாதலத் தொழிலுழவ ரேரி டைக்செம்
பொற்படையினில்லுழுதுசொற்பயிர்செய்தில்லையுமைபொன்னூச லாடிய
பூரணிபு ராதநிறி ராமயர்ப ராவுசிவை பொன்னூச லாடியருளே. கூ. [ருளே

பயிரவியு மாதேவி கௌரிதிரி நயனிபார்ப் பதிசூலி பரைம கேசை
பகவதியி மாசலைபு ராந்தகிம னோன்மனி பவானிசிவை யம்பா நிரா
மயைநரா யணிநீலி கங்காளி நடராச வாமிசாம் பவிகு மாரி
மகமாயி சகமாது காத்தியா யனிசிங்க வாகனி சதுர்ப்பு யத்தி
சயைவீரி மாதங்கி தருமவர்த் தனியமலை சத்திசங் கரியெ னநின் [தானம்
றண்ணருள் செய்நாமகோ டியினென்றை யன்பினிற் சாற்றுநர்த் தாங்கு
புயையுரிய தில்லைவரு தயைவிரியும் வல்லிசெம் பொன்னூச லாடியருளே
புன்னெறிசெலாரிதயமன்னுசிவகாமியுமைபொன்னூசலாடியருளே. கய.

பொன்னூசற்பருவம் முற்றிற்று.

வாழ்த்து

வேதநெறி வாழநாற் றுறைகடோய்ந் தின்பநிலை மேவுசித் தாந்தம் வாழ
மெய்கண்ட சந்தான தெய்வநா வலகுரவ மேதைமர பாதி வாழ [வாழ
வாதரமெய் யன்பர்குலம் வாழவெண் ணீறுமணி யைந்தெழுத் தென்றும்
வன்னசோபானம்வந்கின்ன நூல்பாடுகென வம்பலவ னருண்முன் வாய்ப்ப
வோதுசிவ காமசுந் தாதீட்சி தாதிதிரு வுடையவந் தணர்கள் வாழ.
யுண்மையன் புற்றடிய னயராது பூசாதி யுரியதொண் டாற்றி வாழப்
போதமலர் தில்லைமா தேவியிந் நூனினது பொன்னடிச் சார்ந்து வாழப்
பொற்சபையி னிற்பானை யற்புறந டத்துபரி பூரணீ யருளு வாயே. ௧௧.

இத்தகுபிள் ளைத்தமிழ்செய் வித்தவரு னர்ச்சகரொ ணிதயத்தி ருந்து வாக்கி
னிடையுற்ப வித்தனையெ மன்னைநீ நின்னருளி னின்பமக வாதியிட்ட
சித்திபெறு வானிதனை யச்சினுய்த் தெங்கணுந் திகழப்ப ரப்பி யன்பு
செய்விசுவநா தன்வேட்டாங்கருளனின் னருட்செய்கையேயோதலென்னே
துத்தநிறை வாரிதியொர் மெய்த்தவசிந் மாமகவு துய்த்தருள்வெள்ளம்பொ
தோய்கருணை வாரியென வேயருளு நாயக துரந்தரிபு ரந்தரிமுற் [ழியுமா
புத்தமுத மொத்ததமிழ் வித்தகனு ணற்கமுது பொற்கிணமு கந்த ளித்த
போதசிவ காமிருக சாதபர வாமிபரி பூரணீ யருளுவாயே.

உ

சிவமயம்.

தில்லைச்சிலேடை

வெண்பா.

பூமாதர் வாழ்தில்லைப் புத்தேட் இருபொருள் வெண்
பாமாலை சூட்டும் பணியருளுஞ்—சோமேலைப்
பொற்பகத்தின் செய்கோ புரவாயி லாம்பண்முக
கற்பகத்தின் செய்ய கழல்.

மேலைச் சோ என்க. சோ—மதில்.

நூல்

பூவாரும் பண்ணவரும் போதவரு மாதவருந்
தேவாரம் போற்றுசீர்த் தில்லையே—தாவாதங்
காடகத்த னாடகத்தன் பாளிரு வோர்க்குமன்றி
னாடகத்த னாடகத்த னார்வு. (க)

பூவாரும் பண்ணவர்—பிரமதேவர். இவர் தெய்வவாரத்தால்துதிக்கும் தில்லை. வாரம்—அன்பு. போதஅரியமாதவர், தேவாரத்தைப்பேணுந்தில்லை யென்க. தாவாது அங்கு ஆள் தக தன் நாடு அகத்து அன்பாளர் இருவோர்க்கு ஆடகத்தமன்றின் நாடகத்தன் ஆர்வுஎன்க. பண்ணவர்—பண்முறை தேர்ந்தவரெனக்கொண்டு அதற்கியையப்பொருள் கோடலுமாம்.

வில்லம் பலநடமு மீதுயரு மூதெயிலுஞ்
செல்லம் புலியமருந் தில்லையே—சொலவிலிங்கத்
தாவர கனத்தன் பகத்தா ரருச்சனைசெ
யாவர கனத்த னகம். (உ)

நடம், (அங்கு)ச் சென்ற அழகியபுலியால் விரும்பப்படும். எயில், செல்லும் அம்புலியும்பொருந்தப்படும்.

மன்னும் பணியருஞ்சேல் வாவியெழும் வாவிகளுந்
தென்னம் பலம்வீழுந் தில்லையே—மின்னிலைவேற்
சேய்மதலை யம்புயத்தான் சேமம் விடப்பணித்தான்
செய்மதலை யம்புயத்தான் சேர்வு. (௩

பணியர், அழகிய அம்பலத்தைவிரும்பும். வாவிகள், தென்னையின் பலங்கள்வீழப்பெறும். சேயாகியமதலையை பிரமன் சிறைவிடப்பணித்தவன். செய்மதலை—சிவந்தகொன்றை.

காதும் புறத்தகத்த காரிருளுங் காளையருஞ்
சேதம் பலமடுக்குந் தில்லையே—வேதந்
தருவாயான் மாதிடத்தான் றண்கயிலை யாலந்
தருவாயான் மாதிடத்தான் சார்பு. (௪)

இருள், சேது அம்பலத்தால்மடுக்கப்படும். சேது—செம்மை. காளையர், சேக்களினது பலத்தையடக்கும். தம், ஆறனுருபு குறித்துநிற்கும் அசை.

மாகம் படுக்குமன்றில் வந்தவரும் பைந்தடியுந்
தேகங் கடக்குஞ்சீர்த் தில்லையே—மாகந்
தரமலையுங் கந்தரத்தன் றானவர்கோ னாள்சோர்
தரமலையுங் கந்தரத்தன் சார்பு. (௫)

தேகங்கடத்தல்—பிறவிநீக்கம். தடி—வயல். அதில்தேனானது கங்கையடக்கிமேலெழும். கங்கு—வரம்பு. மா—கருமை. நாள்சோர்தரப் பொருதகந்தர்

கற்பார் தபதியருங் காரார் விதரணருஞ்
சிற்ப மறப்புரியுந் தில்லையே—யற்பமரு
முள்ளம் பரத்தா ருழுவையரி போற்றுநட
முள்ளம் பரத்தா ருறை. (௬)

கற்பு—கற்றல். தபதியர், சிற்பநூல்களைமிகவிரும்பும். காரையொத்த விதரணர்சுருக்கமறக்கொடைசெய்யும். சிற்பம்—சுருக்கம். உள்ளம் பரத்தில்ஆர்கின்ற உழுவை அரி. உழுவை—புலி. அரி—பாம்பு. யாவராலும் உள்ளப்படுகின்றஅம்பரம்.

நன்கலைக்கல் லூரிகளு நாரியர்மைந் தாரைகளுந்
தென்கலைமா னம்பரிக்குந் தில்லையே—தன்கயிலை
யேயா னடத்தினா னெண்ணாதார் கண்ணுறா
வேயா னடத்தினா னில். (௭)

கல்லூரிகள், தமிழின் பெருமையை வகிக்கும். தாரை—கண். அது, அழகிய கலைமானையும் அம்பையும் அரிக்கும். கயிலையைஒத்தஆனைநடத்தி னவன். எண்ணுதார் கண்காண ஏயாதவன் நடனத்தினன்.

நந்தா ரகழிகளு நன்னுதலார் வின்னுதலுஞ்
சிந்தூர மங்காட்டுந் தில்லையே—யிந்தூருங்
கோடீரத் தானமர்வான் கூத்தனடி யேனுளத்துங்
கோடீரத் தானமர்வான் கூர்வு. (அ)

அகழிகள், யானைகளை அங்குமுழக்காட்டப்பெறும். நுதல், சிந்தூரதில கத்தால் அழகுகாட்டப்பெறும். அமர் வான் கூத்தன்—விரும்புகின்ற ஆ காசநடனன். கூர்வு—மிகுதி. அது ஈண்டு மிகவிரும்பிவசிக்கும் வாசஸ்தல மென்னுங் குறிப்பு.

சீர்த்தடஞ்சேர் மாதவருஞ் செய்யவன்னர் மெய்யுளமுந்
தீர்த்தம் படிந்தேறுந் தில்லையே—போர்த்திகிரிக்
கோபால னத்தனூர் கூர்ந்திறைஞ்ச நேர்ந்தருளுங்
கோபால னத்தனூர் கூர்வு. (௯)

உள்ளம், சுத்தமாய்ப்பணிவுற்று உயரும். கோபாலனுகிய நத்தன். கோ பாலன்— நெற்றிக்கண்ணன்.

பாராள் முடிவேந்தும் பாதலமு மீதலமுஞ்
சேராரை யங்காட்டுந் தில்லையே—நேரார்முன்
மாகனகக் கார்முகந்தான் வாங்கினு னேங்குமுடி
மாகனகக் கார்முகந்தான் வாழ்வு. (௧௦)

வேந்து, பகைஞரை அங்குவருத்தும். கீழு மேலுஞ்சேர்ந்தமதில், அழகு காட்டும். ஆரை—மதில். மா கனக கார்முகம்—பெரியபொன் வில். முடியில் மாகம் நகு அக் காரைமுகந்தவன். கார்—நீர். மேகமெனினுமாம்.

மாசகலரன் றேருளமு மாணவர்த மாணவமுந்
தேசிகனே யங்கடக்குந் தில்லையே—பூசை
யனைய விதம்புரிந்தா னாதரிப்பா னென்பா
லனைய விதம்புரிந்தா னூர்வு. (௧௧)

உளம், தேசுஇகல் நேயங்கள் தக்கும். இகல்—வலி. பூசை—பூனை. (அது) போன்றதன்மையைவிரும்பி ஆதரிப்பான். புரிந்தான்—முற்றெச்சம். புரி தல்—விரும்புதல். அல் னைய இதம் செய்தான்.

ஓதான் குளப்படிநீ ரும்மடவார் தம்மிதழுஞ்
சேதாம் பலங்கொடுக்குந் தில்லையே—வேதாந்த
மோதரியான் றந்திரத்தா லுய்த்துணர்ந்தார்க் கின்னலுற
வோதரியான் றந்திரத்தா னூர். (௧௨)

நீர், சேதுதீர்த்தபலனைக்கொடுக்கும். ஆம்—நீர். இதழ், ஆம்பலை அங்கு ஒடுக்கும். வேதாந்தத்தாலும் ஓதற்கரியான். தமது ஸ்திரபுத்தியால்நன்குணர்ந்தார்க்கு இன்னலுறவோ தரியான். ஆகமத்தான்.

பூம்பொழிலும் வாங்கவியும் போரயரும் வீரர்களும்
தேம்பலா வின்பலமார் தில்லையே—நாம்பிரம
மென்பார்க்கு மாகத்த னென்றுதன தொன்றுணர்த்தா
னென்பார்க்கு மாகத்த னில். (௧௩)

பொழிலில், தேம்பல் ஆ இன்பு அலம் ஆர்—பழம்பூக்களை ஆக்கள் இன்புநிறைய உண்கின்ற. கவிகள், பலாப்பழத்தை உண்கின்ற. வீரர்கள், இளைக்காத இனியபெலம் ஆர்கின்ற. தேம்பல்—இளைத்தல். நாம்பிரமம் என்பார்க்கு மேலாகியகர்த்தன் (தானே) என்றுதனது தொன்மையை உணர்த்தாதவன். எனபு ஆர்க்கும் ஆகத்தன். ஆகம்—மார்பு, மேனியுமாம்.

அவ்வினையொத் தார்மலத்தை யையருமன்னூர்தொழிலுஞ்
செவ்விதியங் காதரிக்குந் தில்லையே—நவ்வியம
ரங்கரத்த ரானூ ரலகிலிமை யோரென்பா
ரங்கரத் ரானூ ரகம். (௧௪)

ஐயர்—முனிவர். செவ்வி—பக்குவம். மலத்தால் தியங்காமல் பக்குவகாலத்தில் முனிவர்கள் வினைஒத்தாரது மலத்தை அரிக்கும் என்க. தொழில், செவ்வையான விதியைஅங்கு ஆதரிக்கும். ஆனூர்—ஆனையுடையார். ஆனூர்—குறையாதவர்.

உத்தாந்தண் சைவநெறி யுண்மையருந் திண்மையருஞ்
சித்தாந்தஞ் செய்யுஞ்சீர்த் தில்லையே—முத்தாந்
தரங்கத் தரணியார் தானத்தார் போற்றந்
தரங்கத் தரணியார் சார்பு. (௧௫)

உத்து—உயர்வு. உண்மையர், பரபக்கங்களை மறுத்துச்சுபக்கசித்தாந்தஞ் செய்யும். திண்மையர் சித்து ஆம் தஞ்சு எய்யும். தஞ்சு—பற்றுக்கோடு. அது சிவம். எய்தல்—அறிதல். தானம்—சுவர்க்கம். போற்று அந்தரங்கத்தர் அணியார்.

வாரங் கழனிகளு பாண்கிடையும் பாண்டில்களுஞ்
சீரங் குரம்படருந் தில்லையே—சாரங்க
மேவங் காஞர் விழிதரால் லாழிதந்து
மேவங் காஞர் விழைவு. (௧௬)

கழனிகளில், சிறந்தஅங்குரம் படரும். கிடையில், சீர்அங்கு உரமாகப் படரும். கிடை-வேதசாலை. சீர்—ஒலி பாண்டில் எருது. சீரம்—கலப்பை. குரம்பு—வரம்பு. ஆழிதந்து அங்குமேவுஆஞர். மேவுதல்—விரும்புதல்.

தீக்குரவர் பாற்பலரும் வேதியரில் வேதிகளுந்
தீக்கை யினிதமருந் தில்லையே—தூக்குகுழைக்
காதார நாகத்தார்க் கத்தரிமை யோர்க்கரணைக்
காதார நாகத்தார் காப்பு. (௧௭)

தீக்கையை இனிது விரும்பும். வேதி-குண்டம். தீ கையின் நிதம் மருவும். கை—ஒழுக்கம். அந் நாகமாகிய தாரணிந்த புயத்தர். கத்தம்-புயம். அரணைக்காக்கின்ற தாரநாகத்தார். தாரம்-வெள்ளி.

மாமறைகள் வாவியினு பங்கையர்கள் கொங்கையினுந்
தேமல் கனங்காட்டுந் தில்லையே—காமன்
புரமாய்த்த வம்பகத்தன் போர்நிகும்பனறு
புரமாய்த்த வம்பகத்தன் பொற்பு. (௧௮)

தே மல்கு அனம்—தெய்வத்தன்மைமிக்க அன்னம். தேமல் பொன்னிறங்காட்டும். கனம்-பொன். மாய்த்தஅம்பகம்—மறைத்தகண். ஆறுபுரங்களை அழித்த விஷ்ணுவாகிய அம்பையுடைய கர்த்தன்.

சேரங்கத் தண்ணுமையுஞ் செங்கமலக் கொங்கலருஞ்
சீரங்க ஞதரிக்குந் தில்லையே—நாரங்கொள்
கையரா வாட்டினார் காதலித்தார் பான்மலமாங்
கையரா வாட்டினார் காப்பு. (௧௯)

சீர் அங்கனா இலக்குமி. நார் காதலித்தார்—அன்பைவிரும்பினோர். மலமாகியகைக்கின்ற அரவை வாட்டினார்.

வீணையிசைப் பாரகமு மெல்லியரும் பல்கலையுஞ்
சேணிய ரங்கடுக்குந் தில்லையே—வேணியின்க
ணோதம் படுத்தார்சி வோகமுற்றந் நாட்கீதை
யோதம் படுத்தா ருறை.. (௨௦)

அகத்தில் சேணியர் அடுக்கும். சேணியர்—வித்தியாதரர். மெல்லியர், சேணுயர்ந்த அரங்கில் அடுக்கும். கலைகளைச் சேணியர்மடித்து அடுக்கும். சேணியர்—நெய்வோர். ஓதம்-நீர். கீதை ஓது அம்பு விஷ்ணுவாகிய அம்பு.

மீக்கனக மாப்பொதுவும் வீக்கமழு நீர்க்கயமுந்
தேக்கமல மாக்களமர் தில்லையே—நோக்கெரியிற்
காமருட லம்படுத்தான் காணிதழி வேணியின்கட்
காமருட லம்படுத்தான் காப்பு. (௨௧)

பொது, அமலமாந்தர்களால் விரும்பப்படும். கயம், கமலத்தில் வண்டுகள் அமரப்படும். வேணியில், உடல்—மாறுபட்டுவந்த காமர் அம்பு அடுத்தான்.

ஓர்த்துணர்ந்த மோனருமங் கோவலற மேவினருஞ்
சேத்திரவா சஞ்செய்யுந் தில்லையே—காத்திரஞ்சே
ரங்கனையா னங்கனைபா னங்கையினா னாகஞ்சா
ரங்கனையா னங்கனையா னூர்வு. (௨௨)

மோனர், சேத்திர ஆசு அஞ்சு எய்யும். சேத்திரம்-உடம்பு. அம்கனை ஆன் அங்கையினான் ஆகஞ்சார் அங்கன் ஐயான் ஆறுஅங்கன் கையான்.

ஆரச்சி வோகமுற்றோ ரான்மாவ மான்மாவுந்
தீரத்துவமகலுந் தில்லையே—பேரத்
தருவா னகத்தார் தமக்கா ரமுதந்
தருவா னகத்தார் தலம். (௨௩)

ஆன்மா, துவம் தீர அகலும்—துவயம் நீங்கிவிட விசாலிக்கும். மால் மா, மயக்க இருள். தீரத்துவம் நீங்கும். பேர் அத்தரு வானகத்தார் பேர்ந்தோடிய அத்தருவையுடைய வானகத்தார். அமுதம் தரு வால்நகத்தார். வால்நகம்--வெள்ளிமலை.

காவலர்த மாவரனுங் காட்டுமெழிற் பேட்டனமுஞ்
சேவ லமருஞ்சீர்த் தில்லையே—பாவுந்
தருமமமை யாரத்தன் றன்னடைந்தார்க் கின்பி
தரும்மை யாரத்தன் சார்பு. (௨௪)

அரண், காவலைப்பொருந்தும். சேவல்—காவல். அன்னம் சேவலைவிரும்பும். இன்பை ஈதரும் மை ஆரத்தன்.

மிக்கார்கள் புன்மதத்தை விற்செறியுஞ் சிற்சபையைத்
திக்காரங் கண்டிவருந் தில்லையே—அக்கார
மென்னவந்த ணித்தா னிதயத்தான் றோர்க்கிரங்கி
யென்னவந்த ணித்தா னிடம். (உரு)

புன்மதத்தைத்திக்காரஞ்செய்து இவரும். சபையைத் திக்கிலுள்ளாரும் அங்கு அண்டி வரும். ஆன்றோர்க்கு இதயத்தவந்து வெல்லம்போல அண்ணித்தான். அண்ணித்தல் மதுரித்தல். (எனக்கு) இரங்கி என் அவம் தணித்தான்.

நவ்விவிழி யார்மொழியு நண்ணினர்க்குப் பண்ணவருஞ்
செவ்வழியங் காட்டுஞ்சீர்த் தில்லையே—வெளவியவென்
கோதரங்கன் மாதரங்கண் கூர்ந்தொழித்தான் வார்ந்தசை
மேகோதரங்கன் மாதரங்கன் கூர்வு. (உசு) [டைக்

மொழி, செவ்வழிப்பண்ணை அங்கு ஆட்டும். புனிவர், செவ்விய வழியின் அழகைக்காட்டும். என் சோதினைல் (நான்) அரங்குதலை அழகிய அருட் கண் மிருந்து ஒழித்தான். சடையில்மேலான தரங்கன். மாதரை அங்க த்திற்கொண்டவன்.

மாலையங்கு மாளிகையு மங்கையர்க டங்கண்ணுஞ்
சேலையங்கொ டித்திகழுந் தில்லையே—பாலம்
வருமப்ப கத்தன் வயங்கெழுபுள் ளேற்றி
வருமம்ப கத்தன் மனை. (உஎ)

மேகம் அசைகின்ற மாளிகையில் சேலைக்கொடிதிகழும். அயங்குதல்- அசைதல். கண், சேலை அங்குஒடித்துஇகழும். கருடனிலேறும் விண்டுவாகிய அம்பையுடையகர்த்தன்.

மாவழங்கு கானகத்து மாகமுந்து கோபுரத்துந்
தீவகங்க ணேயமுறுந் தில்லையே—மேவுமங்கு
கையா னகத்தன் கருதார்ப் பொடித்தவிலங்
கையா னகத்தன் களம். (உஅ)

மாக்கள், தாம்வழங்குங்காட்டில் தீவகங்களிடத்து நேசமுறும். தீவகம்- பார்வைமிருகம். கோபுரத்திலுள்ள தீபங்களில் நேயம்மிகும். நேயம்—எண்ணெய். விரும்பும் அங்கு உகைக்கின்ற ஆன் அகத்தன். வில் அம் கையான். நகு அத்தன்

சீராரு நூலுணர்த்துந் தேசிகருங் காவலருஞ்
சேராரை யங்கலைக்குந் தில்லையே—நேராம்
வினையா ருளத்தர் விரிந்துமுற்று முட்கொள்
வினையா ருளத்தர் விழைவு. (உகூ)

தேசிகர், சேர் ஆர் ஐயம் கலைக்கும். ஆர்-அரிய. எங்கும்விரிந்து (உலக) முழுதுந்தன்னுட்கொள்கின்ற வில்லையார்(யாவரும்)உள்ளுகின்ற அத்தர்

மாசபையும் வாவிகளு மாதவரும் வான்புகழுந்
தேச மடுக்குஞ்சீர்த் தில்லையே—பேசுமறை
வன்னித் திருக்கரனார் மாதிடத்தா ரோதுநுதல்
வன்னித் திருக்கரனார் வாழ்வு. (௩௦)

சபை, ஒளியை அடுக்கும். வாவி, தெளிந்த நீரைஅடுக்கும். மாதவர், தெய்வசுகத்தைஅனுபவிக்கும். புகழ், தேசங்களைநிறைக்கும். மறைபேசுங்கிளிதிருக்கரனில் ஆர்ந்தமாது. நுதலில் அக்கினிக்கண்ணுடைய அரனார்

பொங்குமெழின் மங்கையரும் பொற்பணிசெய் சிற்பர்களும்
செங்கற் படுக்குஞ்சீர்த் தில்லையே—மங்கையமர்
தங்கனக வில்லார் சகமொடுங்கு நாளோங்கித்
தங்கனக வில்லார் தலம். (௩க)

மங்கையர், செவ்விய கற்பு அடுக்கும். சிற்பர்-சிவந்தரத்தினங்களைப்பதிக்கும். கையிலமர்ந்த தமது கனக வில். தங்க நகம் எனினுமாம். ஓங்கித் தங்கு அனக இல் கயிலையமென்க.

நேராரும் போதகரு நீளுமணி மாளிகையுந்
தேராத வற்படுக்குந் தில்லையே—சீராரும்
பொற்பணிய நாகத்தார் போந்திறைஞ்ச வார்ந்தநஞ்சர்
பொற்பணிய நாகத்தார் பொற்பு. (௩உ)

நேர்மைநிறைந்த போதகர், தேராத அல்லையழிக்கும். மாளிகை, தேர் ஆதவனைக்கீழ்ப்படுத்தும். சீராரும் பொற்பு அண்ணிய நாகத்தார்—தேவர்கள். பொன் பணி அம் நாகத்தார்.

பையார் சிறூர்களத்தும் பற்பலவா யாலயத்துஞ்
செய்யா வரணஞ்சேர் தில்லையே—மொய்யார்சங்
கங்கையார் தங்கையார் காதரத்தார் மாதரத்தார்
கங்கையார் தங்கையார் காப்பு. (௩௩)

பை ஆர் சிறார்—இளம்பிள்ளைகள். பைங்குழவிஎன்பதுபோல. அவர் கழுத்தில் செய்யப்பட்ட ஆபரணங்கள்சேர் ஆலயத்தில் செப்பமாகிய பிராகாரங்கள்சேர். சங்கம் கையாரது தங்கையாரிடத்துக்காதரமுடையவர். காதரம்-விருப்பம். மா தரத்தார். கங்கையையுடையார் தங்கு ஐயார்.

மாதகைய சேதிமமும் வாவிகளுங் காவகமுஞ்
சீதமுற வாகமஞ்சார் தில்லையே—பாதமுடி
யஞ்சனத்தன் காண்பரியா னந்தமிட றுந்துமறை
யஞ்சனத்தன் காண்பரியா னூர்வு. (௯ச)

சேதிமம்—கோயில். அங்குக்குளிர்ச்சிபொருந்த ஆகமஞ்சார். வாவிகள், இலச்சுமி தம் உறவாக அழகு ஆர். மஞ்சு-அழகு. காவகம், சீதம் உறு அ-வாகமஞ்சு ஆர். சீதம்—நீர். உறு-மிகுந்த. அ—சுட்டு. வாக மஞ்சு—அழகியமேகம். மிடறு அஞ்சனத்தன் மறை அழகிய பரியான்.

மாவகலக் காவலரு மாதளியிற் கேதனமுஞ்
சேவகமுற் றூடலுறுந் தில்லையே—பாவகனிந்
தாதவனங் கண்ணு னகங்கனியார்க் கின்பமரு
ளாதவனங் கண்ணு னகம். (௯ரு)

காவலர், வீரமுதிர்ந்தவெற்றியுறும். கேதனம், சேவைத்தன்னிடத்துற்று அசையும். அருளாதவன் அங்கு அண்ணுன்.

மண்ணரச ரொண்புயமும் வாளமர்கைக் காளையருந்
திண்ணகத்தி னூடலமர் தில்லையே—பண்ணகத்த
மானத் திராவிடத்தான் மாமிடற்றின் வானமுண்ணு
மானத் திராவிடத்தான் வாழ்வு. (௯சு)

புயம், திண்ணியமலைபோன்ற வெற்றியுறும். காளையர், ஆட்டுக்கடாக்களின் போராடலை விரும்பும். மிடற்றில் வானவரை யுண்ணும்படி நத்திய இராவைப்போலுங் கரிய விடத்தையுடையான்.

கொங்கார்ந்த வாளியும்வெண் கொற்றக் குடைவேந்துஞ்
சிங்கா தனமடுக்குந் தில்லையே—சங்கார்
கரத்தனய னத்தன் கதிர்சோமன் செந்திக்
கரத்தனயன் அத்தன் களம். (௯௭)

வாவி, குறையாமல் அன்னங்கள் அடுக்கும். சங்கார்கரத்தனுக்கும் அயனுக்கும்அத்தன். கரத்த—ஒளியுடைய.

நீங்கா இமையோரு நீடருவிற் பாடளியுந்
தேங்கா தரமடுக்குந் தில்லையே—வாங்கியவில்
லோதியம ரக்கரத்தா ஞோதியர்மூன் றேடிரண்டென்
றோதியம ரக்கரத்தா னார். (௩அ)

இமையோர், தேங்கு ஆகரம் அடுக்கும். அளி, தேம் காதர மடுக்கும். வில்லாகிய ஓதி-மலை. ஓதியர் ஞானியர். மூன்று இரண்டு என்று ஓதி விரும்பும் அக்கரத்தான்.

தாரகத்தா ரம்பலமுந் தார்ப்பரகர் சீர்ப்புயமுஞ்
சீரகத்தார் மேவுஞ்சீர்த் தில்லையே—பேரகத்தான்
றூய வலஞ்சுழியான் றூதைகளத் தாவியெங்குந்
தாய வலஞ்சுழியான் சார்பு. (௩௯)

பிரணவசொரூபாது அம்பலம், சிறந்த மனத்தால் விரும்பப்பெறும். பரதர்-வைசியர். தாயம்—உரிமை. எங்குந்தாவியஆணவமலமாகிய அல்லும் அஞ்சும் உழியான். உழி—இடம்.

புக்கின்ப மாநடமும் பூக்கமழுங் காக்களுமண்
டிக்கந் தரம்பரவுந் தில்லையே—மிக்கவுடை
யாசையா னாசையா னாத ருள்புரியு
மாசையா னாசையா னார்வு. (௪௦)

இன்பமாநடனம், மண்ணுலகும் திக்கும் அந்தரமும் (வந்து சபையிற்) புக்குப்பரவப்பெறும். காக்கள், மண்டி மேகம்பரவப்பெறும். ஆசை உடையான். ஆசை-திசை. குற்றத்தை யான்பொருந்தாது அருள்புரியும் ஆசையான் பொன்னிறத்தன். ஆசை-பொன்.

சுத்தொரந் தருநடமுந் தங்கமலப் புங்கவருஞ்
சித்தம் பரம்புரியுந் தில்லையே—வித்தம்பூ
மாதவத்தை யாதரித்தான் மச்செபனீத் தாரியற்று
மாதவத்தை யாதரித்தான் வாழ்வு. (௪௧)

நடம், சித்தாகிய அம்பரத்தில் புரியும். புங்கவர்-பெரியார். சித்தத்தால் பரத்தைவிரும்பும். வித்தம் பொன். பூ-பூமி. மாது-பெண். இம்மூன்று அவஸ்தையாகிய ஆது அரித்து.

முற்றியநீர்ப் பொற்றசுப்பு முல்லையமர் கொல்லைகளுந்
தெற்றியம ராவுந்தும் தில்லையே—பொற்றொடியா

ரங்கத்த னங்கத்த னாய்நின் றொடுக்கமா
ரங்கத்த னங்கத்த னார்வு. (சஉ)

,நசும்பு, தெற்றிகளில் அமர்ந்து உயரும். முல்லைப்புதல்களையுடைய முல்லைநிலம், அமர் ஆ-(யாவரும்) விரும்பும் பசுக்கள். தெற்றி-செறிந்து. உகதும்-செல்லப்பெறும். (எல்லாம் ஒடுங்கும்) அங்குத்தலைவனாய் நின்று தன்னிடத்து ஒடுக்கிய அமரர்களின் என்பையணிந்தவன் நம் கர்த்தன்.

பம்புமொளி யம்பலமும் பந்தரு முன் றந்தையார்
செம்பியன்மாட் டங்கடுக்குந் தில்லையே—நம்புவட
பாதவத்தன் மாதவத்தன் பாளர்சென்னி யிற்பதிக்கும்
பாதவத்தன் மாதவத்தன் பற்று. (சங)

அம்பலம், செம்பியன்முன் தாதை ஆர் மாட்டினால் அடுக்கப்பெறும் மாடு-பொன். அடுக்குதல் ஈண்டுவேய்தல். பந்தர், முதன்மைபெற்றதந்தை யாராது செவ்விய பியலிடத்திவர்ந்து அங்குஅடுக்கும். பியல்-பிடர். பதிக்கும் பாத அஸ்தன். மாதையுடைய பாதியன்.

தங்கியசார்த் தூலபதர் தம்மகமுந் தாபதருஞ்
சிங்கவன்ம னங்கடுக்குந் தில்லையே—மங்கையொரு
பாகத்த வாகத்தன் பாகத்தர் போற்றுமருட்
பாகத்த வாகத்தன் பற்று. (சச)

தாபதர், அல் சிங்கும்படி மனசை முனிந்திழுக்கும். பாகத்தர்-பக்குவர். அருட்பாவை யணிந்தபுயத்தையுடைய வாகு அத்தன். வாகு-அழகு.

ஒன்றுதுணை வர்ப்பிரியல் லோதியரு மோதியருந்
தென்றலையா னைக்கடுக்குந் தில்லையே—புன்றலைய
பூதப் படையான் புகன்மூ விலைவடிவப்
பூதப் படையான் புரம். (சரு)

அல்லோதியர், தென்றலையும் ஆனையும் முனியும். ஓதியர் யமனைமுனியும். சிறிய தலைப்பூத சைனியத்தையுடையான். பூதமூவிலை வடிவப் படை-பரிசுத்தமான சூலாயுதம்.

மாவலங்க லம்புயத்து மைந்தருமன் னார்நடையுஞ்
சேவலங்க ளாட்டுஞ்சேர் தில்லையே—மேவுசக
காரணத்த னாரணத்தன் கட்பதத்தன் பொற்சடைக்கட்
காரணத்த னாரணத்தன் காப்பு. (சகா)

மைந்தர், சேவலை அங்கண் போராடச்செய்யும். நடை, சேவின் வலத்தை தன்கண்காட்டும். சடையில் கார்அண்அத்தன் ஆரணத்தையுடையவன். கார்-மேகம். நீரெனினுமாம்.

புண்ணியத்தொண்டரூருநரும்பொற்பணிசெய்சிற்பர்களு
திண்ணகக்கை யாலாற்றுந் தில்லையே—தண்ணிதழித் [ந்
தாரகத்த னோரகத்தன் றன்மடியுற் றேநேயமெய்த்
தாரகத்த னோரகத்தன் சார்பு. (சஎ)

தொண்டர், திண்ணிய மனஒழுக்கத்துடன் ஆற்றும். சிற்பர், திண்ணகமென்னுங்கருவி பிடித்தகையினுற் செய்யும். இதழித்தாரணிந்த கர்த்தன். ஞானமனசில் வசிப்பவன்.

பம்பியபோர் வீரர்களும் பண்புறுதொன் டன்பர்களுஞ்
செட்புலமே விப்புரியுந் தில்லையே—யம்பவள
வண்ணத்தா னத்தன் வயங்கும் பதாகையமர்
வண்ணத்தா னத்தன் மனை (சஅ)

செம்புலம்-யுத்தகளம். அன்பர், செம்மையானஅறிவை விரும்பிச்செய்யும். பவளநிறத்தன் நத்தன் வண்ணத்து-அழகிய. ஆனையுடைய அத்தன்.

வின்மைந்தர்தோளுமன்றின்மேவினர்க்குச்சார்வினையுஞ்
சென்மந் தரமலைக்குந் தில்லையே—வன்மஞ்செ
யுண்மா தடுத்தா ருழுவலன்பர்க் கோர்மேனி
யுண்மா தடுத்தா ருறைவு. (சகூ)

தோள், செல்படியின்ற மந்தரமலையை அலைக்கும். வினை, பிறவி தருதற்கு அஞ்சும். அன்பர்க்கு வஞ்செய்கின்ற உள்ளக்கருமையைத்தடுத்தவர்

எவ்வங்கொள் காமுகர்பா லின்மதனு நந்தனமுஞ்
செவ்வந்திப் போதடுக்குந் தில்லையே—ம்பளவஞ்சேர்
மாவிடத்தார் கந்தரத்தார் மன்னிமயத் தன்னையமர்
மாவிடத்தார் கந்தரத்தர் வாழ்வு. (ருo)

மதன், அந்திநேரத்தில் அடுக்கும். மா விடம்-கரிய விடம். அன்னை அமர் மகத்தாகிய இடப்பாகர். கந்தர்அத்தர். கம் தரத்தா எனினுமாம்.

கிரத்த வானிரையுங் கேதமறு மாதவருந்
திரத்த வம்பயிலுந் தில்லையே—பிரத்த

வானம் பரித்தார் மதிமுடியார் நஞ்சருந்தி
வானம் பரித்தார் மனை. (ருக)

ஆனிரை, நீர்க்கரையிலுள்ள அம்பு அயிலும். மாதவர் மிகத்தவஞ்செய்யும். தீரத்துடன் செய்யும் எனினுமாம். ஈரமுள்ள மேலான அம்பு—கங்கை. அரித்தார்—பாம்பாகிமாலை. அருந்தி வானுலகைத்தாங்கினவர்.

அம்மடவா ரம்மமுழ ணூபினரு மாய்பொழிலுஞ்
செம்மலையா ரம்மடுக்குந் தில்லையே— மும்மலமும்
போகத்தான் போற்றும் புனிதர்க் கினிதருண்மெய்ப்
போகத்தான் போற்றும் புரம். (ருஉ)

அம்மம்—முலை; அது, செம்மையான மலையையொத்த அம் அடுக்கும். மலையிலுள்ள ஆரம் அடுக்கப்பெறும் எனினுமாம். ஆயினர்-தாய்மார். அவர்கள், பிள்ளைகளை ஊண்நுகரும்படி ஊட்டும். பொழில், பழம்பூக்களை நிலமபொருந்த நிறைக்கும். போற்றும் புரம்-பேணும் ஊர்,

ஓராயர் தோழங்க ழும்பொழிலு மம்பலமுஞ்
சீராக மஞ்சாருந் தில்லையே—யேரார்
திருநட்ட மாடினன் சேர்ா் புரம்பி
திருநட்ட மாடினன் சேர்வு. (ருங)

தோழங்கள், சீர் ஆகமம் சாரும். கமம்-நிறைவு. பொழில். சீ ராக மஞ்சு ஆரும். சீ—இலக்குமி. ராகம்-விருப்பம். அம்பலம், சீர் ஒலியுள்ள ஆகமம் சாரும். பிதிரும் நட்டம் ஆடினன்-பொடியாகிய நஷ்டத்தைச்செய்தவன்.

ஓதியமெய்த் தொண்டிடத்து மொண்மா ணவரகத்துஞ்
சேதிமத்த ரற்படுக்குந் தில்லையே—மூதிமய
மங்கையமர் வாமத்தன் வாங்கியவிற் பொன்னேதி
மங்கையமர் வாமத்தன் வாழ்வு. (ருச)

சேதிமத்தர் கோயிற்பணியாளர். அவர்கள், தொண்டினிடத்து அற்பு அடுக்கும். சேதி மத்தர்—மத்தவியல்பைச் சேதிக்கின்றவர். மத்தவியல்பு-மயக்கத்தைச்செய்யுமலத்தினியல்பு. அப்பெரியார், மாணவரிடத்துள்ள அல்லைப்படுக்கும். பொன் ஓதிமம்-பொன் மலை. வாமம்—அழகு.

பொங்குசித்தர் மார்பகமும் போரயரும் வீரர்களுஞ்
சிங்கநா தம்படுக்குந் தில்லையே—கங்கைநதி
வேணியான் பாணியான் வேட்டார்க் கருண்ஞான
வேணியான் பாணியான் வீடு. (ருரு)

சித்தர், மார்பில் சிங்காதமென்னும் அணியை அணியும். வீரர், சிங்கத் தொனிசெய்யும். பாணியானைப் வேட்டார்க்கு அருள் என்க. பாணித்தல்—தாமசித்தல். ஞானவேணி-ஞானாகாசம். ஆன் பாணியான் இடபக்கொடி தரித்த கையான்.

ஒள்ளிழையார் சொல்விழியு மோம்புமனை பான்மகவுந்
தெள்விளிபா லங்கடுக்குந் தில்லையே—கள்ளிதழித்
தாரான் றரப்பணியான் றன்னடையார்க் கின்னருளைத்
தாரான் றரப்பணியான் சார்பு. (ருசு)

சொல், தெள்விளிப்பண்ணையும்-விழி, ஆலத்தையும் ஒக்கும். மகவு, தெளிவாகிய அழைப்பினால் அங்கு அடுக்கும். தரம் பணி-மேலாகிய பாம்பு. தரம்பணி-சிரசுகளாகிய ஆபரணம். தரம்-சிரசு.

கந்தமலர்ச் சோலைகளுங் கற்குநருஞ் சற்குருவுஞ்
சிந்தனைய வங்கடக்குந் தில்லையே—முந்துமறை
யீசான சத்தத்த னென்றோது பதியன்பர்க்
கீசான சத்தத்தனில். (ருஎ)

சோலை, சிந்து அனைய அம் கள் தக்கும். சிந்து—கடல். கற்குநர், சிந்தனை அவம் கடக்கும். குரு, சிந்து அல்லைய அங்கு அடக்கும். ஈசானசப்தவாச்சியன். அன்பர்க்கு ஈகின்ற சானசத்தாகிய அத்தன். சானம்—தியானம்.

பம்புமடி யார்மலத்தைப் பாற்றுநரும் வீக்கலருஞ்
செம்பிரச முண்டெனச்செய் தில்லையே—நம்பு
மறைப்பரிய வாகனத்தன் மாண்டமனத் தாருண்
மறைப்பரிய வாகனத்தன் வாழ்வு. (ருஅ)

பாற்றுநர், செம்பு இரசமுண்டால் பொன்னாதல் போலச்செய். வீக்கு-வண்டுகளுக்கு. அலர், சிவந்ததேனை உண்ணச்செய். மறைப்பரி அவ்வாகனத்தன். மனத்தாருள் மறைப்பு அரிய வாகன் அத்தன்.

விற்புருவத் தார்தனமு மேவியநூற் காவியருஞ்
செப்பங் கடுக்குஞ்சீர்த்—தில்லையே யப்பமருஞ்
சேகரனார் மாகரனார் தீர்ந்தவிவேண் டப்படார்செய்
சேகரனார் மாகரனார் சேர்வு. (ருகூ)

9B. 74

தனம், அம் செப்பு ஒக்கும். காவியர், சொற்களை அடுக்கும். மாகர், (சிவ நிந்தனைசெய்த தக்கன்யாகத்து) அந்நாள் தீர்ந்து அவிவேண்டிச்சென்ற சிவத்துரோகத்தால் தண்டனைசெய்தசேகு அானார். மா கானார். சேகு-வயிரம். மா-மிருகம். இது பொதுவாயினும் மானுக்குச் சிறப்புப்பெயர்.

கவ்வை யகல்பணியுங் காரிகையார் சீர்நடமுஞ்
செவ்வி யரங்காற்றுந் தில்லையே—நவ்விமழு
வாளக் கரத்தார் மறைக்குளுறையி ராமைந்து
வாளக் கரத்தார் மனை. (௬௦)

கவ்வை- துன்பம். செவ்வியர் அங்கு பணி ஆற்றும். மழுவாள்-மழு வாயுதம்; வாள்-ஒளி.

போமங்க ணாதுலரும் பூவரசா லேவர்களுஞ்
சேமங் கடவாத தில்லையே—வாமஞ்சார்
மாதரார் காதரவன் வந்திப்பார்க் காதரவன்
மாதரார் காதரவன் வாழ்வு. (௬௧)

வேற்றிடங்களிலிருந்து அங்கட்போகிய ஆதுலரும், சேமங்கள்தவாத. சேமம்-சுகம். அரசால் யாவரும் காவல் கடவாத. மாதர் ஆர் காது அரவன். மாதர்-அழகு.

உந்தாயர் மாலையினு மோவறுகூ டங்களினுஞ்
சிந்தாத்தந் தாவளஞ்சேர் தில்லையே—மைந்தா
ரிலங்கையனை யப்படுத்தானில்லம்பே ருக்கொண்
டிலங்கையனை யப்படுத்தா னில். (௬௨)

(காலையிற்புறத்தே) செலுத்தியஆயர், சிந்து ஆ-அங்கங்தேசிதறிநின்று மேய்கின்ற ஆக்களை. (மாலையில்) தத்தம் தாவளங்களிற் சேர்க்கின்ற. கூடங்களில் வலிகெடாத தந்தாவளஞ்சேர்கின்ற. கொண்டு இலங்கு ஐயன் நயப்பு அடுத்தான்.

பொன்னம் பலத்துமங்குப் போந்தவரன் பேந்தகத்துஞ்
சின்னம் படுக்குஞ்சீர்த் தில்லையே—சென்னிப்
படர்நீத்த வம்புலியான் பண்டுதக்க னற்றேய்
படர்நீத்த வம்புலியான் பற்று. (௬௩)

அம்பலத்து வாத்தியங்கள் ஒலிக்கும். போந்தவர், அகத்திற் சிறுமை நீக்கும். சென்னியிற்படர்ந்த நீத்தமாகிய அம் புல்லியவன். தேய் படர்-தேய்ந்த துன்பம்,

12556

பூணந் துரங்கம் புனைவோரும் பொற்கொடியுஞ்
சேணந் தரமார்க்குந் தில்லையே—காணந்தோய்
பூதரமாங் கோதண்டன் பொன்றுமலங் குன்று பல
பூதரமாங் கோதண்டன் பொற்பு. (௫௪)

அம் துரங்கத்துக்குப் பூண் புனைவோர், சேணம் தரமாக ஆர்க்கும். கொடி துரித்த அந்தரத்தில் ஆர்க்கும். காணம் தோய் பூதரம்-பொன்மலை. பலபூதர்-பலபரிசுத்தர். அவர்கள், தன் அம் ஆங்கு ஓது அண்டன் அம்-ஈண்டுமகிமை.

சுற்றெயிலிற் சூழ்பொறியுஞ் சூட்டனமார் கோட்டகமுஞ்
செற்றலரை யங்காட்டுந் தில்லையே—யுற்றுணர்ந்தார்க்
காதரனார் தீதரனார் காணார்கா ணார்முழுதுங்
காதரனார் தீதரனார் காப்பு. (௫௫)

பொறி, பகைவரை அங்கு ஆட்டும். கோட்டகம்-வாவி. நெருங்கிய அலர் ஐ அம் காட்டும். உணர்ந்தாரைக்காக்கின்ற தானுள்ளவர். உணர்ந்தாரிடத்து விருப்பமுள்ளவரெனினுமாம். தீதர் அந் நார்காணாரால் காணப்படாதவர். முழுதும் காது அரனார். தீ தரனார்.

பாகமுனி வோர்கையும் பைங்கொடியா ரங்கையுஞ்
சீகரமங் காட்டுஞ்சீர்த் தில்லையே—தேகமிள
மையுடனி லாவென்றார் மாண்மனத்தார் காண்விழிசெம்
மையுடனி லாவென்றார் வாழ்வு. (௫௬)

முனிவர்கை, அம் சீகரம்காட்டும். சீகரம்-கமண்டலம். கொடியார் கை, இலக்குமிகரம் அம் காட்டும். தேகம் இளமை உடல் நில்லாவென்று (வெறுத்து) மேலார்ந்த மாண்மனத்தில் வசிப்பவர். உடல்-பொன். விழி. செம்மையாகிய அக்கினியுடன் நிலாவும் என்று மாக்கொண்டவர்.

மானம் பறந்தலையு மாணார்கண் கந்தரமுஞ்
சேனந் தலைச்சேர்க்குந் தில்லையே—யானந்த
தாண்டவத்தை யாற்றுவான் றண்ணருளானன்னெறியான்
றண்டவத்தை யாற்றுவான் சார்பு. (௫௭)

பறந்தலை, சேனமுதலிய பறவைகளைத்தன்னிடத்துசேர்க்கும். கண்ணும் கண்டமும், முறையே சேலையுந்நந்தையும் அலைத்து எர்செய்யும். யான் நன்னெறியைத்தாண்டும் அவத்தைத் தணிப்பான்.

அல்வென்ற மாடமுமல் லாநெறியிற் காவலருஞ்
செல்வந் தடுக்குஞ்சீர்த் தில்லையே—வில்வ
முறுசே கரனு ருவனைத் துசங்கை
யுறுசே கரனு ருமை. (சுஅ)

மாடம், செல் வந்து அடுக்கப்பெறும். காவலர், தர்மமல்லாதவழியில் வருஞ்செல்வத்தைதடுக்கும். துசம்கை யுறு விஷ்ணுவாகிய இடபக்கொடி தரித்த கரனர்.

தம்பாத மாநடமுந் தாவில்பல மாளிகையுஞ்
செம்பொன்னி னம்பலஞ்சேர் தில்லையே—யும்பாச்சத்
தாலந் தரித்தா ரலறவருள் கூர்ந்துகண்டத்
தாலந் தரித்தா ரகம். (சுகூ)

மாளிகை, செவ்விய இலக்குமியின் அழகியபலம் சேர். அச்சத்தால் அந தரித்தவர்களாய் அலற.

தெவ்வாண்மை சிந்தரசர் செல்வர்களுஞ் செல்வர்களுஞ்
செவ்வேளாண் மையமருந் தில்லையே—யொவ்வாப்
பரசமயக் கோளரியார் பண்பெறுகற் றூங்குப்
பரசமயக் கோளரியார் பற்று. (எ0)

அரசகுமாரர் வேளின ஆண்மையைப்பொருந்தும். செல்வர், செவ்விய கொடையைவிரும்பும். கற்றூங்கெரி என்றபதிகத்தாற் பரசுதலமைந்த அக் கோள் அரியார். கோள்—குற்றம்.

யோகாங்க ளாற்றுநரு மம்பரம ரப்பலமுந்
தேகாந்தி யங்கெடுக்குந் தில்லையே—சீகாழிச்
சம்பந்த ரத்தர் தளர்ந்தரிபின் றேர்ந்தேத்துஞ்
சம்பந்த ரத்தர் தலம். (எக)

யோகம் ஆற்றுநர், தேகமுடிவைக்கெடுக்கும். அம்பலம், தெய்விககாந்தி யை எடுத்து வீசும். அரி, (நானே பிரமமெனறெண்ணிய சிவத்துரோகத் தால் பாதலங்கடந்தும் பாதங்காணாது) தளர்ந்து (பின் நான் அடிமையே. சிவனே பிரமம் என்றுண்மை.) தேர்ந்து எத்திய சம்பு அந்தரத்தர்.

நேசஞ்செய் மாதவரு நீடுபொருட் பீடிகையுந
தேசம் பலமருவுந் தில்லையே—பேசுமிள

மைந்தனஞ் சம்பந்தன் வாக்கமுதுண்டான் மிடற்ற
மைந்தனஞ் சம்பந்தன் வாழ்வு. (எ௨)

பீடிகை-கடைவிதி. அதில் பலதேசத்தார்மருவும். மிடற்று அமைந்த நஞ்சம் பந்தன்.

ஓதங் கழனியிற்றே னும்பாதர் தம்பொருளுஞ்
சேதங் கடக்குஞ்சீர்த் தில்லையே—மேதையுழ
வாரப்படையத்தர் வாகீசர் வாழ்த்துமுடி
வாரப் படையத்தர் வாழ்வு. (எ௩)

தேன் சேது, அங்குஅடக்கும். சேது-வரம்பு. பாதர்—வைசியர். ஞான மேவடிவாயமைந்த உழவாரம். முடியில் மேனின்று வார்ந்த அப்பு அடைத்த அத்தர்.

உந்தா ரிசைக்கிடையு முற்றவர்பா னற்றவருஞ்
சிந்தா குலமாற்றுந் தில்லையே—மைந்தார்கல்
லேமதலை யாகத்தன் னெய்தினர்க்கான் சூற்பொறித்தா
னேமதலை யாகத்த னில். (எ௪)

கிடை, சிந்துபோன்றபேரொலியைச்செய். கல்லே தெப்பமாக. எம் மதலை-பொன்னிறக்கொன்றை. ஏமம் ஈறுகெட்டது.

மாகமருங் காவகமும் வாகமரு மாகவமுஞ்
சேகரங்க ணாற்றுஞ்சீர்த் தில்லையே—சாகரஞ்சார்
மைக்கடுக்கை யாரத்தான் வாங்கினர்க்குச் சந்துசென்மா
மைக்கடுக்கை யாரத்தான் வாழ்வு. (எ௫)

காவகம், சேகரம் கள்நாற்றும். சேகரம்-மாமரம். ஆகவம். சேகர் அங்கண் ஆற்றும். ஆகவம்-போர். சேகர்—வயிரித்தகுணத்தர். மைக்கடுவைத்தான் ஆரக்கையால் வாங்கின சுந்தரர்க்கு. மாமை—அழகு.

தூவனத்த வரவிகளுந் தொய்யின் முலைத் தையலருஞ்
சீவனமுற் றேயுஞ்சீர்த் தில்லையே—நாவலூர்
வேதியனங் கற்படுத்தான் மெய்ந்நெறிச்செல் லாதுலைகை
வேதியனங் கற்படுத்தான் வீடு. (எ௬)

வெள்ளிய அன்னப்பறவைகளையுடைய வாவிகள், சீவன முழுதும் நிறையப்பெறும். சீவனம்-நீர். தையலர், இலக்குமியின் அழகுற்று ஏயும். நாவலூர்ச்(சிவ)வேதியனது அற்பு அங்கு அடுக்கப்பெற்றவன்.

வெளவா ரலர்த்தடமும் வைகறையு மெய்கிடையுஞ்
செவ்வார ணத்திசையார் தில்லையே—யவ்வாத
வூராரை வீட்டினா ரும்பாச முன்பதித்தா
ரூராரை வீட்டினா ரூர். (எஎ)

தடம், செவ்விய வாரணத்து இசையார். வாரணம்-சங்கு. வைகறை, சிவந்தகோழி இசையார். கிடை, நேரிய ஆரணத்திசையார். ஆரும்பாச வீட்டிற்பதித்தார். ஊர்கின்ற மும்மதிலை வீட்டினார்.

சேயம் புயையனையார் சிற்றிடையு முற்றகமுஞ்
சீயங் கடுக்குஞ்சீர்த் தில்லையே—மேயவன்பர்
பாடுதிரு வாசகத்தர் பைங்கொன்றை யந்தாது
பாடுதிரு வாசகத்தர் பற்று (எஅ)

முற்றகமுகம், சீ அங்குஅடுக்கும். தாது பக்கத்தில் உதிருகின்றவாசனை பொருந்திய தோளர்.

மாகா முகரிடமும் வாவியும்பண் பாடுநரும்
சீகாம ரம்பாடுந் தில்லையே—வாகா
ரியற்பகையார் பாலேற்றா ரேந்திழையைப் போந்தென்
னியற்பகையார் பாலேற்றா ரில். (எகூ)

காமுகரிடம், வென்றவரால் இழித்துக்கூறப்படும் காமருடைய அம்பு ஆடலைச்செய்யும். வாவி, இலக்குமிவாசமலர் செறிந்த அழகிய நீர் ஆடும். போந்து-அருள்கூர்ந்துவந்து. என் இயல் பகு ஐயார் தற்போதம் நீக்கிய தலைவர். பால் ஏற்றார்-வெள்விடையார்.

தேவியன்மெய் யன்பர்களுந் தீநெறிச்சா ரைம்புலமுந்
தீவிரத ரங்காட்டுந் தில்லையே—கோவணமே
ராத்தா சேறுடையார்க் காங்கதுவே பாங்கமைத்தா
ராத்தா சேறுடையா ரார்வு. (அ௦)

அன்பர்கள், தீவிரதரபக்குவம்காட்டும். ஐம்புலம், அக்கினிபோன்ற பரிசுத்தவிரதர்களால் அங்கு வருத்தித்தம்வசமாக்கப்படும். கோரதற்பொ

ருட்டுத்தராசின்மேல் ஏறுதலில் மனம் உடையாதவர்க்கு, அத்தராசேஉரி யவிமானமாக அமைத்தவர்—ஆப்தர். ஆசு ஏறுடையார். ஆசு-விரைவு.

உந்துபொழி லின்கணிரு ளுந்தகைய மைந்தர்களுஞ்
செந்தினக ரன்புரையுந் தில்லையே—சந்தப்
பணியாற்று மூர்த்தியார்ப் பாரரிக்கென் றேவும்
பணியாற்று மூர்த்தியார் பற்று. (அக)

இருல்—தேன்கூடு. அது, சூரியனை ஒக்கும். மைந்தர், செந்தில்நகரனை ஒக்கும். சந்தனத்தொண்டுசெய்தமூர்த்தியாரைப் பூமிபாரந்தாங்குகஎன்று ஏவிய பாம்புசுமக்குதிருமேனியர்.

போரா டவர்மார்பும் பூந்தடமும் பல்பொருளுஞ்
சீரா வணந்தேங்குந் தில்லையே—யாராத
காதலங்கண் ணப்பனுர் கான்றவமு துண்டாரென்
காதலங்கண் ணப்பனுர் காப்பு. (அஉ)

மார்பு, சீராவின் அழகுநிறையும். சீரா—கவசம். தடம், சீராக வள்நந்து எங்கும். பொருள், சீர் ஆவணத்தில் நிறையும். சீர்—ஒலி. என்அல் காது அங்கண் அப்பனுர்.

கொங்கார்கான் வேட்டுவருங் கோமறுகிற் காளையருஞ்
சிங்காரமாக வருந் தில்லையே—வங்கியக்கை
யானய ஞரிசையா ரஞ்செவியார் மஞ்சனமா
லானய ஞரிசையா ரார்வு. (அந)

வேட்டுவர் சிங்கு ஆர மாகவரும். சிங்கு—கோலை. மஞ்சு அன்ன மாலா கிய ஆனையுடைய நாயனுர் கீர்த்தியுடையார்.

தையலர்க டங்களனுஞ் சங்கீதர் தங்களனுஞ்
செய்யகாந் தாரமுறுந் தில்லையே—மெய்யுணர்ந்தா
ரம்மையா ரம்மிடற்று ரற்புதவந் தாதியா
ரம்மையா ரம்மிடற்று ரார்வு. (அச)

தையலர்களம், சிவந்த காந்தியைச்செய்கின்ற ரத்தின ஆரங்கள்மிகும். மெய்யுணர்ந்து (பொய்யையுதறிவிட்டுக்கயிலையில்வந்து தம்மடியில்) ஆர்ந்த அம்மையாருடைய அழகும் வலியுமுள்ள தாராகிய அந்தாதியையுடையவர்.

ஏருற்ற மஞ்சனமு மெய்ம்மறையோ ரும்மானிச்
சீருத் திரமாடுந் தில்லையே—யோருமப்பர்க்
காமருமப் பூதியார் கண்ணுவந்தா ரெண்ணினரைக்
காமருமப் பூதியார் காப்பு. [௮௫]

திருமஞ்சனம், ஆனிமாசத்துச்சிறந்த உத்திரநாளில் ஆடப்பெறும். மறையோர், மானி-பெருமையுடைய ஸ்ரீருத்திரம் செபிக்கும். ஆடுதல்-சொல்லுதல். எண்ணினரைக்காக்கின்றவர் மருமத்திற் (பாவப்பூசிய)விபூதியார்.

ஆரியபெரான் வண்ணத்தந் தாதியுந்தா ரன்பர்களுஞ்
சேரலர்நா ரானவிற்றுந் தில்லையே—மாரனுட
னீருக்கு மம்பகத்த னீருக்கப் போந்தவிட
நீருக்கு மம்பகத்த னேர்வு. [௮௬]

சேரலர், அந்தாதியை நாரால் நவிற்றும். நார் அன்பு. அன்பர், சேர்த்த அலர்களைக்கொண்டு நாரினால் தார்செய்யும். (எவற்றையுஞ்)சாம்பலாக்கும் படிவந்தவிடத்தினது நீல்நிறந்தாக்கப்பெற்றவிஷ்ணுவாகியஅம்ப கத்தன்.

பையத் துணைச் சேவல்களும் பாவலர்க ணாவகமுஞ்
செய்யுண் மணமேவுந் தில்லையே—மெய்யன்
புடையார் கணம்புலனா ரொண்டிறல்கண் டீபண்
புடையார் கணப்புலனா ரூர். [௮௭]

துணையுடன்கூடியசேவல்கள், செய்களில்மணம் விரும்பும். மேவல்--விரும்பல். மெய்அன்பு உடையாதவராகியகணம்புல்லநாயனாருடைய ஒள்ளியதிடபத்தியைக்கண்டு அருளீந்த பண்புடையவர். கண் அம் புல்லனார்--தியானிக்கத்தக்க அழகிய இடபத்தையுடையவர். புல்லம்-இடபம்.

நாரணிளங் கோக்களுமுன் னர்ப்பரவும் விப்பிருஞ்
சீரணவுத் தாரணஞ்செய் தில்லையே—பேரமைச்சர்
மங்கையர்க ணாயகியார் வாழ்த்தவழித் தாரமண்ட
மங்கையர்க ணாயகியார் வாழ்வு. [௮௮]

நார் அண் இளங்கோக்கள், சீரணைத்தாரணஞ்செய். சந்நிதியிற்றுதிக்கின்றபிராமணர், சீர் அணவு உத்து ஆரண(கோஷஞ்)செய். வாழ்த்த-வேண்டிக்கொள்ள. அமண்தமம்அழித்தார். கண் ஆய் அகி ஆர் கையர்--மதிப்புள்ளதுலாய்கின்றபாம்பு ஆர் கையினர்.

தூக்குலகெ லாமுதலுந் தூயோர் பரத்துவமுஞ்
சேக்கிழார்க் கென்றோதுந் தில்லையே—சாக்கியனார்
கற்றூர் மனம்புரத்தார் காசறுமெய் கண்டமுன்னூல்
கற்றூர் மனம்புரத்தார் காப்பு. [௮௯]

உலகெலாம் என்று தூக்குமுதல் சேக்கிழார்க்காக ஓதும். தூக்கு-பாட்டு. பரிசுத்தர்களாகிய பெரியோர்கள் சேவுர்குரிய சிவனுக்கே பரத்துவமுமுடைன்றோதும். சாக்கியர் எறிந்த கல்லாகிய பூமன்னிய அழகியமேனியர். தார்-பூ. முன்னூல் கற்றவர்கள் மிகநம்பு உரத்தார். உரம்-ஞானம்.

நாவையர்சீர்த் தொண்டர்புரா ணஞ்சொலற்குந் தஞ்சுறற்
சேவையர்கோ மான்மேவுந் தில்லையே—மேவை [குஞ்
யரியமருந் தாண்டவத்த னய்ந்தமைந்தா ராரு
மரியமருந் தாண்டவத்த னார்வு. [௯௰]

நாவினாற் செய்யப்படும் புராணம் என்க. அயர்தல்—செய்தல். தஞ்சு-பற்றுக்கோடு. சேவையர்-சேவிப்பவர். கோ மால்--மேலாகிய ஆசை. மேவு ஐ அரி அமரும்-(சிவாஞ்ஞையின்படி) வந்த அழகிய பாம்பு விரும்பும். ஆரும் அரிய மருந்து ஆண்ட அத்தன்.

நாறு திசைப்பொழிலு நன்னெறியின் மன்னினருந்
தேறன் மலரகஞ்சார் தில்லையே—யாறுமதி
சென்னிக் கிசைத்தார்முன் சேக்கிழார் பாற்கருணை
சென்னிக் கிசைத்தார் செறிவு. [௯௧]

திசையளவு நாறு பொழில், தேன்மலர் தன்னிடஞ்சாரப்பெறும். மன்னினர், தெளிவாய் விரிந்த மனஞ்சாரும். ஆறுமதிகளைச் சென்னியிற் பொருத்தினவர். கருணையை அனபாய சோழற்கு இசைத்தவர்.

தையலர்கண் மொய்ம்முலையுந் தாம்பலமீன் வாம்பணையுஞ்
செய்யகலங் காட்டுஞ்சீர்த் தில்லையே—தய்யவெண்ணெய்
மெய்கண்ட தேசிகனார் மெய்ப்போதத் தாரருளான்
மெய்கண்ட தேசிகனார் வீடு [௯௨]

நெருங்கியமுலைதள், செவ்விய ஆபரணங்காட்டும். மீன்கள் தாவுகின்ற மருதநிலம், செய்களின் விரிவைக்காட்டும். மெய்ப்போதத்தையுடையார், அருளால் திருமேனி செய்துகொண்டகூத்தர். தேசிகம்-கூத்து.

மேதகைய மாதவரு மேவுமவர் பாவுளமுஞ்
சேத நமன்பணிகொ டில்லையே—மேதை
யருணந் திவளத்தன் றசாற்சார்ந் தோர்மெய்
யருணந் திவளத்த னூர்வு. [கூங]

மாதவர், (உயிர்களை உடலிற்பிரிக்கின்ற) சேதஞ்செய்யும் நமனுடைய பணிகொள்கின்ற. பரந்த உள்ளம், சேதனமும் அன்பும் அணியாக்கொள்கின்ற. அருணந்திசிவாசாரியர், மேதை வளத்துடன் அன்று ஆசானை அடுத்து ஓர்ந்துணர்ந்த அருணம் திவள்மெய் அத்தன். மேதை-ஞானம்.

கூர்ந்தமுழ வாயிரர்தீக் குண்ட முநன் மைந்தர்களுஞ்
சேர்ந்த னலங்கெழுஞ்சீர்த் தில்லையே—வார்ந்தசெவி
வாய மனத்தார் மறைஞான சம்பந்தர்
வாய மனத்தார் மனை. [கூச]

தீக்குண்டம், சேர்ந்து அனல் அங்கு எழப்பெறும். செவிவாய் அமல்நத்தார். அமலுதல்-பொருந்துதல். நத்து-சங்குகுண்டலம். வாயமனம்-உண்மையுடையமனம்.

மேவினர்பாற் போதகரு மேதவினை வேதிகளுந்
தீவினையங் காட்டுஞ்சீர்த் தில்லையே—மேவுமுடி
யுள்ள முகந்தா ருமாபதியார் பூசனைகொண்
டுள்ள முகந்தா ருறை. [கூரு]

மேதம்-யாகம். வேதி-குண்டம். தீ வில் நயம் காட்டும். முடியுள் அம் முகந்தார்- முடியில் கங்கையை முகந்தவர்.

ஆரியத போவனமு மாவணமு மோனருமாற்
சீரை யரைச்சேர்க்குந் தில்லையே—நாரைநம்பி
யாண்டார்பண் பாடலா ரன்புளத்தார்க் கின்புருவா
யாண்டரர்பண் பாடலா ரார்வு. [கூசு]

வனம், மால் சீர் ஐயரைச்சேர்க்கும். மால்-பெருமை. ஆவணம், மேகலையை அரைச்சு எர்க்கும். மோனர், மாவுரியை அரையிற்சேர்க்கும். ஆல்-அசை. இன்புருவாய் ஆண்டு ஆர் பண்பு ஆடலார். ஆண்டு-அவ்விடம். பண்பு-குணம். ஆடல்-கூத்து. வெற்றியுமாம்.

மீகுலவு சோலைகளு மின்னுமுடி மன்னவருஞ்
சீகாமங் கண்மேவுந் தில்லையே—வாகமர்சு
வேதவன நாமத்தார் மேவுமக வாயுணர்த்தார்
வேதவன நாமத்தார் வீடு. [௯எ]

சோலைகள், அம் கள் சீகரம்-அழகும் தேன்றுளியும்மேவும். மன்னவர், இலக்குமிகரமும் அங்கண்ணும் மேவும். அங்கண்-இரக்கம். சுவேதவன நாமத்தார்-பட்டினத்தடிகள். அவரால் விரும்பப்படுமகவாய்ச் சென்று முடிவில் ஞானேபதேசஞ்செய்தவர். வேதத்தால்(எடுத்துக்கூறப்பெறும்) அழகியகீர்த்தியுடையார். நாமம்-கீர்த்தி.

திவ்விய நூல் வேதியருந் தேவலரும் பாவலருஞ்
செவ்வியம கம்மாற்றுந் தில்லையே—வெவ்வியகா
கோதரத்த வேணியார் கோட்டிபயத் தாய்நீலக்
கோதரத்த வேணியார் கூர்வு. [௯அ]

வேதியர், செவ்விய மகம் ஆற்றும். தெய்வத்தன்மைவிளங்கும் பாவலர், செவ்வி யமகம் ஆற்றும். செவவி-அழகு. காகோதரம்-பாம்பு. நீலக்கோ-கருங்கண். தரத்த அக்கண்போன்ற. ஏணி-மான்.

வாணறு போம்பொழிலு மல்குமல ரல்விகளுந்
தேணறு கால்பாயுந் தில்லையே——யாணறு
கேதனத்தன் போதனத்தன் கேதநத்தப் போதுபொன்னி
கேதனத்தன் போதனத்தன் கேள். [௯௯]

பொழில், தேன்நதிபாயப்பெறும். மலர்களின் அகவிதழில், தேன்-வண்டுகளின் ஆறுகால்பாயும். ஆன் நாறு-விடைதோன்றுகொடியுடையான். போதனும் நத்தனும் தமதுகேதம் நத்தும்படிசெல்கின்ற பொன்நிகேதனத்தன். போதன் அத்தன். நிகேதனம்-கோயில்.

தூங்கமுலை யார்கைச் சுகமு மகவினமுஞ்
செங்கீரை யாடுஞ்சீர்த் தில்லையே——பங்க
ணிமயவரை யாளிடத்தா ரேத்தியடி போற்று
மிமயவரை யாளிடத்தா ரில். [௧00]

சுகம், செவ்வியசொல்லைப்பேசும். கீர்-சொல். இமயவரையாளை இடப்பாகத்திற்கொண்டவர். போற்றும் இமயவரை ஆளுகின்ற கயிலையிடத்தார்.

தில்லைச் சிலேடைவெண்பா முற்றிற்று.

17556

9B
6-74